

# ஞானச்சுடர்

ஆடி

மலர் 2006



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

**தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்.**

**பொருள்:** யாவரையும் ஆராயாது தெரிந்தெடுத்தல் ஆகாது; ஆராய்ந்து அவரவருக்கேற்ற தொழிலை அவரவருக்கு ஒப்பித்தபின் அவரிடத்தில் சந்தேகித்தல் கூடாது.

(509)



# நற்சிந்தனை

## பொன்னடியைப் போற்றுதுமே

### தரவு கொச்சகக் கலிப்பா

மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்றுணையாய் எல்லாமா யல்லவுமாய்ச்
சந்திரனாய்ச் சூரியனாய்ச் சரமசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை கண்டார்கள் பிறவாரே

பிறவார்கள் இறவார்கள் பிறிதொன்றா லயரார்கள்
கரவார்கள் உழலார்கள் கண்டதிலே மனம்வையார்
அறநெறியில் வழுவார்கள் அன்பர்பணி மறவார்கள்
பிறவொன்று மறியார்கள் பிரியாத சிந்தையரே.

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு – ௨ சுடர் – 103

## 2006 ஆடி
## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| கோமயத்தின் அறிவியல் விளக்கம் | கா. கணேசதாசன் | 1 - 2 |
| சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாள்... | பா. சிவனேஸ்வரி | 3 - 6 |
| இளைஞர்களே விழித்துக்.... | இரா. செல்வவடிவேல் | 7 - 8 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவமகாலிங்கம் | 9 - 12 |
| குடிமக்களும் கோயில்களும் | நா. நல்லதம்பி | 13 - 15 |
| அருணகிரிநாத சுவாமிகள் | S.S. ரஜீந்திரன் | 16 - 18 |
| சண்டேஸ்வரர் | நா. சந்திரலீலா | 19 - 20 |
| வாழ்க்கையில் சைவமும்... | கு. கலாநந்தினி | 21 - 24 |
| ஈழத்துச் சிவாலயங்கள் | சிவ சண்முகவடிவேல் | 25 -26 |
| திருவாசகம் | கு. கனகரத்தினம் | 27 - 30 |
| இந்துக்களின் முக்கியகடமை.... | ப. அருந்தவம் | 31 - 33 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 34 - 35 |
| சீவன் முத்தர் தவத்திரு... | வி. விசாலாட்சி | 36 - 37 |
| மாதந்தோறும் விநாயக சதுர்த்தி | ச. பிங்கலன் | - 38 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் | தி. வரதவாணி | 39 - 42 |
| நித்திய அன்னப்பணி.... | | 43 - 44 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 45 - 48 |



**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021 – 2263406

பதிவு இல. Q.D./33/NEWS/2006

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

உ

# ஞானச்சுடர்
# ஆனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடரின் 102வது மலருக்கான வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி கௌரி சுரேசன் அவர்கள் வழங்கினார்கள். மாணவர்கள், கல்விமான்கள், ஆன்மீகவாதிகள், பாமரமக்கள் என பலதரத்தினரும் பயன்படுத்துகின்ற ஞானச்சுடரை மாதாமாதம் தொடர்ந்து வெளியிடுவது சாதாரண விடயமல்ல என்பதை சபையினருக்கு எடுத்துக்கூறினார்கள். மேலும் இந்த சுடரை இவர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் வெளியீடு செய்கின்றார்கள். ஆனால் நாங்கள் இதனைப் பயன்படுத்தி அளவிட முடியாத பயன்களைப் பெற்றுக்கொண்டிருக்கின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

திருமதி கௌரி சுரேசன் அவர்கள் ஞானச்சுடர் சஞ்சிகையை வாசிக்கும்பொழுது முக்கியமாக சந்நிதியில் இடம்பெறுகின்ற அற்புதங்களை வாசிக்கும்பொழுது சந்நிதி யானது ஆலயத்திற்கு வந்து செல்வது போன்ற உணர்வுகளையும் திருப்தியினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் அடியார்களுக்கு பக்திப் பரவசத்துடன் எடுத்துக் கூறினார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

யாழ் பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையின் விரிவுரையாளர் திரு சிவானந்தமூர்த்தி அவர்கள் மலருக்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். இது போன்ற பல ஆத்மீக மலர்களின் வெளியீடுகள் ஒருசில வருடங்களுடன் தடைப்பட்டுப் போவதையும் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் ஞானச்சுடர் எட்டு வருடங்களைத் தாண்டியும் வெளிவந்துகொண்டிருப்பது முருகப்பெருமானது திருவருளே என்பதை அடியார்களுக்கு எடுத்துக்காட்டினார்கள்.

இந்த மலரில் இடம்பெறுகின்ற கட்டுரைகள் கவிதைகள் போன்ற உள்ளடக்கங் களை ஆராய்வதைவிட இது ஒரு திரட்டாக வெளியிடப்படுகின்றது என்ற வகையில் நேர்க்கணிகமாக சிந்திப்பதே பொருத்தமானது எனக் குறிப்பிட்டார்கள். இறைவன் ஒளிமயமாக இருப்பது போல ஞானச்சுடரும் ஞான அறிவை வெளிப்படுத்திக் கொண்டிருப் பதால் ஞானச்சுடர் என்ற பெயர் மிகவும் பொருத்தமானது எனவும் விரிவுரையாளர் அவர்கள் தனது கருத்தை வெளிப்படுத்தினார்கள். சுடரில் இடம்பெற்ற கட்டுரைகளை பொதுவாக மதிப்பீடுசெய்த விரிவுரையாளர் அவர்கள் சுடர்தரும் தகவலில் வெளியிடப்பட்ட வைரமுத்துச்சுவாமிகள் தொடர்பான தகவல்கள் பல தசாப்தங்களுக்கு முன்பு சந்நிதிச் சூழலில் நிலவிய பக்திநிலையை படம்பிடித்துக்காட்டுவதுபற்றியும் எடுத்துக்கூறினார்கள்.

எமது சமயம் கோட்பாட்டு ரீதியான விளக்கங்களை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டினாலும் சமயம் தொடர்பான உண்மைத்தன்மைகளையும் எடுத்துக்கூறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தனது கருத்தையும் சபையில் முன்வைத்தார்கள்.



உ

# சுடர் தரும் தகவல்

## மகாதேவாச் சுவாமிகள்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் வாழ்ந்த சித்தர்கள் ஞானிகள் வரிசையில் மகாதேவாச்சுவாமிகளும் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகின்றார். மகாதேவாச் சுவாமிகள் பர்மா நாட்டின் தலைநகர் ரங்கூனில் பிறந்து பின்பு தனது மூதாதையர்களின் சொந்த இடமான வல்வெட்டித்துறையில் வந்து குடியேறியுள்ளார்கள். இவர் இங்கே திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டாலும் இவருடைய மனைவி இளமையிலே இறைபதம் அடைந்த நிலையில் தனது குழந்தையை உறவினரிடம் கையளித்துவிட்டு இயல்பாகவே நாட்டங்கொண்டிருந்த ஆத்மீகத்துறைக்குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

மகாதேவாச்சுவாமிகள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், நல்லூர்க்கந்தன் ஆலயம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மற்றும் தேவாரப்பாடல்களில் இடம்பெற்ற தலங்களான திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், மற்றும் இந்தியாவில் திருச்செந்தூர் ஆலயம், திருப்பதி ஆலயம் போன்ற பல்வேறு தலங்களுக்கும் தலயாத்திரை மேற்கொண்டு ஆழமான ஆன்மீக அனுபவங்களைப் பெற்றதுடன் பல நாட்கள் தொடர்ச்சியாக நிஷ்டையில் இருந்து ஞானத்தையும் பெற்றுள்ளார்கள்.

மகாதேவாச்சுவாமிகள் ஒருமுறை திருப்பதியில் பலநாட்கள் தொடர்ச்சியாக நிஷ்டையில் இருந்தபின்பு ஒரு சத்திரத்திற்கு சாப்பிடுவதற்கு சென்றுள்ளார். ஆனால் இவர் சென்ற நேரத்தில் சத்திரத்தில் உணவு தீர்ந்த நிலையில் சத்திரத்தின் கதவுகள் மூடப்பட்டுவிட்டன. இந்த நிலையில் சுவாமிகள் மீண்டும் நிஷ்டையில் இருக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவருடைய உள்ளுணர்வு தூண்டியதால் கண்விழித்துள்ளார். அங்கே ஒரு அன்பர் சாஸ்டாங்கமாக இவரை விழுந்து வணங்கி தன்னுடைய வீட்டிற்கு உணவு அருந்துவதற்கு வருமாறு அழைத்துள்ளார்கள். அதற்கு உடன்பட்டு சுவாமிகளும் சென்றுள்ளார்கள். அங்கே விதம்விதமான கறிகளுடன் பல்சுவை உணவும் பழங்களும் நிறைந்த மிகவும் நிறைவான உணவு சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது.

மகாதேவாச்சுவாமிகள் தலயாத்திரை மேற்கொண்டு செல்லுகின்ற இடங்களில் இவரை விளங்கிக்கொள்ளாத சில அன்பர்களினூடாக உலகியல் வாழ்க்கையில் பெறுகின்ற சில கசப்பான அனுபவங்களையும் சுவாமிகள் பெற்றுள்ளார்கள். ஆனாலும் சுவாமிகள் மனிதர்களை மட்டுமல்ல மிருகங்களையும், பறவைகளையும் நேசிக்கின்ற செயற்பாடுகளைத்தான் செல்லுகின்ற எல்லா இடங்களிலும் மேற்கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு எல்லாவகையான அனுபவங்களையும் சுவாமிகள் பெற்றிருந்ததினால் மிகவும் அடக்கமாகவும் அமைதியாகவுமே செயற்படும் இயல்பு இவரிடம் காணப்பட்டுள்ளது. சுவாமிகளினுடைய ஞானநிலையினைப் புரிந்துகொண்டு இவரை நாடிவந்து இவரைக் குருவாகக்கொண்டு செயற்பட்ட அன்பர்களுக்கு ஞானத்தை வழங்கியது மட்டுமல்ல தனது சித்துக்களையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மகாதேவாச்சுவாமிகள் ஞானத்தைப்பெற்று ஒரு ஞானியாக விளங்கியதால் சில தனித்துவமான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளார்கள். சுவாமிகள் சோறு சாப்பிடுவதை பிற்காலத்தில் முற்றாகக் கைவிட்டு க்றீம் கிரேக்கர் பிஸ்கட்டையும் மற்றும் நீராகாரங்களையும் மட்டுமே அருந்தும் பழக்கத்தைக் கடைப்பிடித்தார்கள். அதுமட்டுமல்ல பிஸ்கட்டை சாப்பிடும்பொழுது அவரைச்சூழ உள்ள மனிதர்களுக்கு மட்டுமல்ல எல்லா ஜீவராசிகளுக்கும் வழங்கியபின்பே தான் உட்கொள்ளும் பழக்கமுடையவர். இதேபோன்று நீண்ட நாட்களுக்கு நீராடமலே வாழும் பழக்கம் இவரிடம் இருந்துள்ளது. ஆனால் இவருடைய உடம்பிலிருந்து சந்தணவாசனை வருவதையே மற்றவர்கள் உணர்ந்துள்ளனர்.

ஒருமுறை வ.ஆ. தங்கமயில் என்ற அன்பருடைய விருப்பப்படி அவரது வீட்டிற்கு சென்று அங்கே பல நாட்கள் தங்கியுள்ளார்கள். சுவாமிகள் பல நாட்கள் நீராடாமல் இருந்த நிலையில் சுவாமிகளுக்கு நீராட்டுவதற்கு திரு தங்கமயில் அவர்கள் விருப்பம் கொண்டுள்ளார்கள். ஆனால் அதை வெளிப்படுத்தவில்லை. சுவாமிகள் தங்கமயிலிடம் என்ன யோசிக்கின்றாய். நான் நீராட வருகிறேன் நீ எனக்கு அள்ளி ஊற்று எனக்கூறி அவர் களைக்கும் வரைக்கும் கிணற்றுநீரை அள்ளி ஊற்றுமாறு செய்துள்ளார்கள். இந்த சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேநேரம் திரு தங்கமயில் அவர்களது வானொலியில் இந்தியாவில் உள்ள ஒரு ஆலயந் தொடர்பான குடமுழுக்கு தொடர்பான ஒரு வர்ணனை ஒலிபரப்பாகிக்கொண்டிருந்ததைக் கேட்டபொழுது அவரது உடல் சிலிர்த்துவிட்டது. தானும் ஒரு சுவாமிக்கு இங்கே குடமுழுக்கு செய்கிறேன் என்பதை அவரால் உணரமுடிந்தது.

மகாதேவாச்சுவாமிகள் தன்னுடன் பழகிய அன்பர்களுக்கும் தன்னைக் குருவாகக்கொண்டு செயற்பட்ட அன்பர்களுக்கும் இது போன்ற பல சித்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள். மிகவும் பிரச்சனைகள் நிறைந்த 1980ஆம் ஆண்டு தசாப்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த மகாதேவாச்சுவாமிகள் பல அன்பர்களது வீடுகளில் தங்கியிருந்து அவர்களுக்கு வழிகாட்டி அபயமளித்துள்ளார்கள். பருத்தித்துறையில் கிராமசேவையாளர் அருளானந்தம் அவர்களின் வீட்டிலும் தங்கியிருந்து பல சித்துக்களை செய்துள்ளார்கள்.

மனிதன் உணவில் மட்டுமே போதும் என்ற திருப்தியை வெளிப்படுத்துகின்றான். ஆகவே அன்னதானச்செயற்பாட்டை மேற்கொண்டு அதன்மூலம் மக்களை திருப்தி யடையச் செய்வது சிறந்த தர்மம் என்ற ஆழமான கொள்கையை மகாதேவாச்சுவாமிகள் கொண்டிருந்தார்கள். மயில்வாகன சுவாமிகளின் ஆனந்தாச்சிரமத்திற்கு காலத்திற்குக் காலம் வருகைதந்து அங்கே தங்கிச்செல்வதுடன் இந்த ஆலயச்சூழலையும் தனது பக்குவநிலைக்கு பயன்படுத்தியுள்ளார்கள். மயில்வாகன சுவாமிகள் சமாதியடைந்த பின்பு மோகனதாஸ் சுவாமிகளை அவரது பணியைத் தொடருவதற்கு ஆசீர்வாதம் வழங்கி ஊக்கமளித்தார்கள்.

மகாதேவாச்சுவாமிகள் இந்தியாவுக்கு சென்றபொழுது திருச்செந்தூரில் சமாதியடைந்ததாக நம்பப்படுகிறது.

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகால நிகழ்வு

**கொடியேற்றம்**

*விய வருஷம் ஆவணி 7ம் நாள் (23.08.2006) புதன்கிழமை பின்இரவு 1.40மணி*

**5ம் திருவிழா, ஆவணிச் சதுர்த்தி – காலைத் திருவிழா ஆரம்பம்**

*ஆவணி 11ம்நாள் (27.08.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி*

*ஆவணி விநாயக சதுர்த்தி மாலை 4.30மணிக்கு* விநாயகப் பெருமானும் முருகப் பெருமானும் எழுந்தருளல்

**பூங்காவனம் 10ம் திருவிழா**

*ஆவணி 16ம் நாள் (01.09.2006) வெள்ளிக்கிழமை காலை 8.30மணி*

**சப்பறத் திருவிழா**

*ஆவணி 20ம் நாள் (05.09.2006) செவ்வாய்க்கிழமை மாலை 5.30மணி*

**தேர்த்திருவிழா**

*ஆவணி 21ம் நாள் (06.09.2006) புதன்கிழமை காலை 8.30மணி*

**தீர்த்தத் திருவிழா**

*ஆவணி 22ம் நாள் (07.09.2006) வியாழக்கிழமை காலை 7.00மணி*

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் மூலமாக அமைவது நித்திய அன்னப்பணியேயாகும். அந்த வகையில் ஆச்சிரமப் பணிகளை முன்னெடுத்துச்செல்லும் வகையில் பலவகையில் ஆதரவு நல்கும் அன்பர்கள், அடியார்களுக்கு சந்நிதி வேலவனது பூரண அருள் கிடைக்கவேண்டும் என பிரார்த்தித்து, வழமையான ஆதரவை நல்கி உற்சவகாலத்தில் நடைபெறும் அன்னப் பணிக்கு தாங்கள் ஆதரவை வழங்குமாறு வேண்டுகிறோம்.

சுபம், சாந்தி.

சந்நிதியான் ஆச்சிரமம்.

# சமாதானம் அவன் கையிலே
# தொழுவது எம், கையிலே

வளம்படைத்த தொண்டை மானாற்றினிலே - சூழும்
வார்கட லலைபாடும் கோயிலிலே
குழந்தை முருகனின் அழகுகண்டே - அவன்
கோலத்தில் என்மனம் பறிகொடுத்தேன்

முகமது ஆறுடன் நின்றிருந்தான் - கரம்
முந்நான்கும் எண்ணிடக் காட்டி நின்றான்
இகத்தினில் ஆயிரம் மன்மதரில் - அவன்
இனிய அழகுக்கு எல்லை யுண்டோ

அந்தநாள் சூரனின் ஆணவத்தை - ஞான
அருளுடை வேலா லடர்த்தவனாம்
இந்தநாள் சந்நிதி மூலத்திலே - அன்பர்
ஏத்திப் பணிந்திட நிற்பவனாம்

வள்ளிதெய் வானை மணந்தவனாம் - வனப்பின்
புள்ளி மயிலினின் வாகனனாம் - நல்ல
புள்ளாம் சேவற்கொடி புறமசைய வரங்கள்
அள்ளிக் கொடுக்கின்ற அன்பினனாம்

இமாலயம்போ லினப் பிரச்சினையை - ஐயன்
எள்ளத் தனையாகக் குறைத்து விட்டான்
சமாதானம் வருவதும் அவன் கையிலே - அன்னான்
சரணத்தைத் தொழுவதும் எம் கையிலே

அஞ்சியே அடியார்கள் கெஞ்சி நிற்க - அப்பன்
அங்கையில் வேலினைத் தொட்டுக் காட்டி
நெஞ்சிலே தட்டி நிமிர்ந்து நின்றே - நீவிர்
நேராக வாடாமற் செல்லுமென்றான்

என்னைப் படைத்திட்டான் தன்னைப்பாடி - வரும்
எழில்ஞானச் சுடரிலே எழுதச் சொன்னான்
மன்னி யாச் சிரமத்தில் திங்கள் தோறும் - அது
வளர்ந்து எழுந்து மலர்ந்திடவே

*முதுபெரும்புலவர்,*
*கலாபூசணம்,*
*ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலம்*

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு N. ஜவகர்லால்நேரு**
(கனடா)

**திரு M. இந்திரசேகரம்**
(அவுஸ்திரேலியா)

**திரு R. ரவீந்திரன்**
(அவுஸ்திரேலியா)

**திரு ந. ரவீந்திரன்**
(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி கன்னாதிட்டி யாழ்)

**திரு வ. பாலசிங்கம்**
(கிராமசேவையாளர், கரணவாய்)

**திரு ப. சிவராசா**
(தூதாவளை கரணவாய்)

**திரு சி. இராமகிருஷ்ணா (ஆசிரியர்)**
(வடமராட்சி / கணிதக்கல்வி மூலவள நிலையம் கரணவாய்)

**திரு சி. நவரெத்தினம்**
(துவாரகை கரணவாய்)

**திரு வே. கிருஸ்ணபிள்ளை**
(K.V.K மில் உரிமையாளர் உடுப்பிட்டி)

**திரு ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**அதிபர்**
(அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி)

**உரிமையாளர்**
(கந்தசாமி புடவை நிலையம் சந்நிதி வீதி, அச்சுவேலி)

**திரு M.P. தர்மலிங்கம்**
(பத்திரிகை முகவர் உடுப்பிட்டி)

**திரு பொ. வியாகேஸ் J.P**
(நிர்வாகி பீக்கொன் கல்வி நிறுவனம்)

**திரு மு. வைகுந்தவாசன்**
(இலங்கை வங்கி, அச்சுவேலி)

**திரு இ. சண்முகலிங்கம் J.P**
(பிரதான வீதி, தொண்டைமானாறு)

**திரு S. விக்கினேஸ்வரராசா**

(சுப்ராங் தொலைத்தொடர்புசேவை கதிரிப்பாய்)

**திரு பொ. வெங்கடேஸ்வரன்**

(நகரசபை, பருத்தித்துறை)

**திரு செ. தேவேந்திரநாதன்**

(கணபதி வெதுப்பகம் உரும்பராய்)

**உரிமையாளர்**

(அம்பிகா நகை மாளிகை, 121 கஸ்தூரியார் வீதி யாழ்)

**உரிமையாளர்**

(நகுலா நகை மாடம் 74, கஸ்தூரியார் வீதி, யாழ்)

**அருள்நங்கை சண்முகநாதன்**

(புதிய உயர்கலைக் கல்லூரி யாழ்)

**திரு. S. குணராசா**

(தாளையடி லேன் திருநெல்வேலி)

**அதிபர்**

(யாழ் / இந்து ஆரம்பப்பாடசாலை கஸ்தூரியார் வீதி)

**திரு சி. மகாலிங்கம்**

(அச்சுவேலி)

**திரு செ. சிவானந்தன் G.S**

(கிராம அலுவலர், புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**உரிமையாளர்**

(கல்பனா ஸ்ரோர்ஸ், அச்சுவேலி)

**உரிமையாளர்**

(வேலழகன் இரும்புக் களஞ்சியம் சுண்ணாகம்)

**லயன் S. நித்தியானந்தம்**

(நியூ கல்யாணி ஜூவல்லறி 87, கன்னாதிட்டி)

**கந்தையா ஏகாம்பரம்**

(புறாடி லேன் அரியாலை)

**திரு P. பாலகிருஷ்ணன்**

(நல்லூர் U.N.H.E.R)

**திரு வை. கமலநாதன்**

(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ. பற்று. ப. நோ.கூ.ச)

**திரு இ. சரவணபவன்**

(இந்துசமய விருத்திச் சங்கம், ஆனைக்கோட்டை)

**திரு பொ. பாஸ்கரன் J.P**

(சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை)

உ

# கோமயத்தின் அறிவியல் விளக்கம்

சமூகஜோதி கா. கணேசதாசன் அவர்கள்.

நம் நாட்டுப் பெண்கள் அதி காலை வேளையில் வீட்டு வாயிலில் சாணம் தெளிப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

காலையில் சூரியன் உதயமாவ தற்கு முன் வீட்டு வாயிலில் சாணம் தெளிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் மகாலட்சுமி அந்த வீட்டுக்கு விரும்பி வந்து வாசம் செய்வாள் என்று சாஸ்திரங் கள் சொல்கின்றன.

சூரியன் உதயமானபின் சாணம் தெளித்தால் அது தோஷம் அப்படி நடைபெறும் வீட்டுக்குள் மகாலட்சுமி நுழையமாட்டாள். சாணம் தெளிப்பது சம் பந்தமாக நம் முன்னோர் சொன்ன இந்து சமய வாழ்வியலை வெளிப்படையாகப் பார்த்தால் சாதாரணமாகத் தோன்றும். ஆனால் சிந்தித்தால் இதன் பின்னே பொதிந்து கிடக்கும் அறிவியல் உண்மை தெளிவாகப் புரியும்.

அந்த அறிவியல் உண்மை என்ன தெரியுமா? சூரியன் உதயமாகும் போது வெளிப்படும் முதற்கதிர் புற ஊதாக்கதிர் ஆகும். சாணத்தில் மீத்தேன் வாயு உள் ளது மீத்தேன் வாயுவில் புற ஊதாக்கதிர் விழும்போது ஏற்படும் இரசாயன மாற்றத் தால் பார்மாலிடிஹைடு என்ற கிருமிநாசினி உண்டாகிறது.

இதனால் வெளியிலிருந்து வரு பவர்களின் பாதங்களில் ஏதேனும் கிருமி கள் ஒட்டியிருந்தால் வாயிலில் தெளிக் கப்பட்டிருக்கும் சாணத்தில் மிதித்து விட்டு வருவதால் அந்தக் கிருமிகள் அழிந்து விடுகின்றன. அத்தோடு வீட்டுக்குள் வருபவர்களின் கால்களும் சுத்தமாகி விடுகின்றன. சூரியன் உதயமானபின் வாசல் தெளிப்பதால் தோஷம் உண்டாம் என்று சொன்னதன் அறிவியல் என்ன தெரியுமா? அதாவது உதயமாகிச் சிறிது நேரம் வரைதான் புற ஊதாக்கதிர்கள் வந்து கொண்டிருக்கும்.

நேரம் ஆக ஆகச் சூரியனிட மிருந்து அகச் சிவப்புக் கதிர்கள்தான் வரும். மீத்தேனுடன் அகச் சிவப்புக் கதிர் கள் சேர்ந்தால் பார்மாலிடிஹைடு ஏற் படாது. ஆகவே சூரியன் உதயமான பின் சாணம் தெளிப்பதால் பயனில்லை. கிருமி கள் வீட்டுக்குள் நுழைந்து நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே வாயிலில் சாணம் தெளிப்பது என்பது சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது.

வீட்டுக்குள் மகாலட்சுமி நுழைய மாட்டாள் என்றது ஏன்? செல்வத்தைத் தரும் தெய்வம் மகாலட்சுமி நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயற்ற வாழ்வு வேண்டுமென்றால் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

எங்கள் சைவக் கிரியைகளில் பசு வில் இருந்து பெறும் பஞ்சகவ்வியமாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

பசு அறுகம்புல்லு, குப்பைமேனி, பழம்பாசி, கீழ்க்காய்நெல்லி, நொச்சி, வில்வம்இலை, விஷ்ணுகிராந்தி சீதேவி யார் செங்கழுநீர் போன்ற எத்தனையோ விதமான மூலிகைகளை உண்கின்றது. சமிபாடு அடைந்துபோக மிகுதி பசுவின்

**எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.**

சாணமாக வெளிவருகின்றது. இதனைச் சேமித்து விபூதி தயாரிக்கும்பொழுது அந்த விபூதி எத்தனை விதமான மூலி கைகளின் சாம்பலாக இருக்கும் அத னைப் பயன்படுத்தினால் உடலில் நோய் கள் தங்குமா?

திருநீறு கிருமிகளை அழிக்கும் ஆற்றல் வாய்ந்தது மட்டுமல்ல "சிவசிவா" எனப்பூசும் பொழுது மந்திரமயமாகிறது. நாமும் இவ்வாறு இறுதியில் சாம்ப லாவோம். ஆகவே பற்றற்று வாழ வேண்டும். பற்றற்றான் பற்றினைப் பற்றி அவனடி சேரவேண்டும் என்ற நல்ல நினைப்பை ஏற்படுத்தும். இதனை உணர்ந்து தான் மூன்று நேரமும் கட்டாய மாகத் திருநீற்றைப் பூசும் வண்ணம் வற்புறுத்தியுள்ளார்கள்.

எமது இந்துமத தத்துவங்கள் வெறும் சடங்குகள் அல்ல அத்தனையும் விஞ்ஞான பூர்வமாக விளக்கம் அளிக்கக் கூடியவை.

## நூல் தரிசனம்

**நூல் – ஈழத்துச் சிவாலயங்கள்**

**ஆசிரியர் – வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்**

**பதிப்புரிமை – திரு தம்பு துரைராசா 31A, ஜானகிலேன்,**
**பம்பலப்பிட்டி,**
**கொழும்பு 04.**

**வெளியீடு – ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர்சபை**

**விலை – 350/=**

கவினுறு திருக்கேதீஸ்வர தரிசனத்தை முகப்பு அட்டையில் தாங்கியவண்ணம், மேற்படி நூல் காத்திரமாக வெளிவந்துள்ளது. இதில் சம்பந்தப்பட்ட அனைவரும், தம்மாலியன்ற வரை சிவாலய விபரங்களைத் திரட்டித் தந்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். இந்நூலில் தொண்ணூற்றைந்திற்கும் மேற்பட்ட ஆலயங்களும், கிடைக்கப்பெற்ற வரலாறுகளும், பொருத்தமான படங்களுமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஈழத்துச் சிவாலயங்கள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு இந்நூல் ஒரு கைவிளக்காக நிச்சயம் அமையும் என்பதில் சந்தேகமில்லை. அடுத்த பதிப்பில், மேலும் பல சிவாலயங்கள் இந்நூலில் இடம்பிடித்து ஆர்வலர்களை வணங்கச் செய்யும் என்பது நிஜமானதே. புதிய பதிகங்களும், புராதன வரலாறுகளும் நேர்த்தியாகக் காணப்படுகின்றன. வாசிக்கவும், உணரவும், பாதுகாக்கவும் வேண்டிய நூல் புனிதமோடு நீடு வாழ்வதாக. சைவசமயிகள் நிச்சயம் ஆதரவளிப்பார்கள். நல்லதோர் சிவத்தொண்டு.

கே. எஸ். சிவஞானராஜா.

**தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள்.**



# சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் ஆண்டாள்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்.

ஆடிமாதம் பூரநட்சத்திரத்தில் சுக்லபட்ச சதுர்த்தசியுடன் கூடிய சுபயோக சுபதினத்தில் ஆழ்வாரின் அழகான நந்தவனத்தில் திருமாலுக்குகந்த திருத்துளசிச் செடியின்கீழ் பூமகள் பூமியில் அவதரித்தாள். பெரிய பெருமாள், பெரியஆழ்வார், பெரியகோபுரம், பெரியதேர் இப்படிப் பல பெருமைகளைக் கொண்ட ஊர் ஸ்ரீ வில்லிபுத்தூர். கோதை பிறந்த ஊர். கோவிந்தன் வாழும் ஊர். அங்கே அழகுமிகு நந்தவனம் அமைத்து, அதில் மலரும் மலர்களை மாலையாக்கி அந்த வாடாமலர் மாலையை வடபத்திரசாயிக்கு அளிக்கும் திருப்பணியைச் செய்துவந்தார் பட்டநாதர். சிறுபராயம் முதல் மிகுந்த பக்தியோடு பாமாலையும், பூமாலையும் சூட்டி பாற்கடல் வாசனான வடபத்ரசாயியைப் பூஜித்துவந்தார். ஸ்ரீ வில்லிபுத்தூரில் கோயில் கொண்ட பரந்தாமன் பட்டர் மனத்திலும் கோயில் கொண்டான். அதனால் பட்டநாதர் "பெரியாழ்வார்", "விஷ்ணு சித்தர்" என்றெல்லாம் போற்றப்பட்டார். மாதவனுக்கு மாலை கட்டித் தரும் பணியைத் தொடர மகவு ஒன்றில்லையே என்ற ஏக்கம் ஆழ்வாருக்கு இருந்தது.

சிறிய பிராட்டியான பூதேவியின் ஆசையைப்பூர்த்தி செய்யவும், ஆழ்வாரின் ஆதங்கத்தை நிறைவு செய்யவும் மனங் கொண்டார் மகாவிஷ்ணு. திருத்துளாய்ச் செடியின்கீழே பூமகள் அவதரித்தாள். வழக்கம் போல் பூப்பறிக்க வந்த ஆழ்வார் பொன்மலர் பூத்ததுபோல் பேரொளியுடன் விளங்கிய பூமகளைக் கண்டார். மனம் மலர, சித்தம் மகிழ, நித்தம் தான் வணங்கும் அரங்கனே அளித்த குழந்தை என ஆனந்தக் கண்ணீர் சொரிய, பக்திப் பரவசத்தோடு மெதுவாகக் குழந்தையைத் தூக்கினார். பூவைவிடவும் மிருதுவாக இருந்த குழந்தையைப் பூக்களோடு பூவாக வீட்டிற்கு எடுத்துப் போனார். கோடி சூர்யப் பிரகாசத்துடன் விளங்கிய குழந்தைக்குக் கோதை எனப்பெயர் சூட்டினார். பெரியாழ்வார் தன்னைத் தாயாகப் பாவித்து, கண்ணனுக்காக அம்புலியைக் கூப்பிடுவார். அமுது ஊட்டுவார். தாலாட்டுப் பாடித் தூங்க வைப்பார். கற்பனையில் கண்ணனைத் தாயன்போடு நோக்கியவர் பெரியாழ்வார். கண்ணனுடைய பாடல்களையும், லீலைகளையும், கதைகளையும் தெய்வ மலராய்த் தோன்றிய கோதைக்குச் சொல்லித் தந்தார். பரந்தாமன் கதைகளைச் சொல்லிப் பக்தியூட்டினார். ஆழ்வாரின் இல்லம் வருவோரும் வாசுதேவனைப்பற்றியே பேசினார்கள். குழந்தை கோதை வளர்ந்து மற்றைச் சிறுமிகளோடு சேர்ந்து ஆடினாள், பாடினாள், விளையாடினாள் அனைத்தும் பரந்தாமன் மேலுள்ள பக்தியாகவே வெளிப்பட்டன. கிருஷ்ணலீலைகளைக் கேட்டு வளர்ந்த கோதை மனத்தில் புகுந்து லீலை செய்தான் கண்ணன். கோதையின் கனவிலோ வசீகரமாகக் குழலிசைத்து வேணுகோபாலனாக, காதலனாகக் கண்ணன் தோன்றுகிறான். ஆண்டாள் தெய்வப்பெண். அழகின் கொழுந்து. அவள் உண்ணும் சோறும், பருகும் நீரும் எல்லாம் கண்ணனே என்று களி

**அறிவும் அறியாமையும் சேர்ந்ததே மனம்.**

கூருகின்றாள். கண்ணனையே கணவனாகக் கொள்கிறாள். கார்முகில் வண்ணனை, கமலக்கண்ணனை தன் திரு உள்ளத்தில் அழகொழுக எழுதிப்பார்க்கிறாள். தேனார்பூஞ்சோலைத் தென் அரங்கமாநகரில் கண்ணுறங்கும் பெருமானை நினைக்கநெஞ்சுண்டு, வாழ்த்த வாயுண்டு, பாடப்பாட்டுண்டு என்று கண்ணனின் மணக்கோலத்தைக் கனவிலும், நனவிலும் காண்கிறாள். அரங்கனுக்கு அணிவிக்க வேண்டிய மாலையைத் தான் அணிந்து அழகு பார்த்தாள். தாமோதரனின் மலர்முகம் அவளுள் மலர்நீதது. தன்னையே தாமோதரனாக உணர்ந்தாள் கோதை. அரங்கனுக்கான ஆரத்தை ஆனந்தமாக அணிந்து கண்ணாடியில் பார்த்தாள். அதிலே அவளுக்குப் பதிலாக ஆனந்தக் கிருஷ்ணனே தெரிந்தான். அன்றுமுதல் தந்தைக்குத் தெரியாமல் பூமாலையை தான்சூடி அழகு பார்த்தபின்னரே தந்தையிடம் கொடுத்தனுப்பினாள். கிருஷ்ணனின் மாலைகளைத் தான் அணிந்து பார்ப்பது தவறோ என மனம் உறுத்தியது. "சபரி இராமனுக்கான கனிகளைச் சுவைத்துப் பார்த்தது போல, இதுவும் தவறில்லை" என எண்ணினாள். கோதை சூடிக் கொடுக்கும் மாலைகள் வாடிப்போகாமல் வனப்புடன் திருமாலின் திருமேனியில் பிரகாசம் கூடி இருந்தன. வழக்கம் போல வடபத்ரசாயிக்கு ஆழ்வார் கொண்டுவந்த மாலையைச் சூட்டப்போன அர்ச்சகர், மாலையில் தலைமுடி இருந்தது கண்டதிர்ந்து, பட்டரிடம் காட்டினார். அவர் புதிதாக ஒரு மாலையைக் கட்டித்தந்துவிட்டு மனவருத்தத்தோடு வீடு திரும்பினார். ஆழ்வாரின் கனவிலும், அர்ச்சகரின் கனவிலும் தோன்றிய அனந்தசயனன், கோதை சூடித்தரும் மாலையையே தான் ஆனந்தமாக அணிவதாகச் சொல்லி, கோதை சூடிய மாலைகளையே தனக்குச் சாத்தும்படி சொன்னார்.

விழித்தெழுந்த ஆழ்வார் கோதையை ஆசீர்வதித்து, "ஆண்டவனா னரங்க மன்னரையே ஆட்கொண்ட நீ" "ஆண்டாள்" என்று அழைக்கப்படுவாய் எனக் கூறினார்.

மதுசூதனனே தனக்கு மாலையிட வேண்டும் என எண்ணிய கோதைக்கு, கோபியர் கொஞ்சும் இரமணன் ஆயர் பாடியை விட்டுத் தன்னைத்தேடி வருவானா எனச்சந்தேகம் எழுந்தது. கண்ணனை அடையும் பாதை தேடினாள். கோபாலனுக் குப்பிடித்த கோபிகையாக மாற முடிபு செய்த கோதை ஆய்ச்சியர் குலப்பெண் போல் தன்னை அலங்கரித்து மார்கழி நோன்பு மேற்கொண்டாள். பாமாலையும், பூமாலையும் சூட்டினாள். அருமை மகள் கோதை பேதைப்பெண்ணாக ஆண்டவனையே மணக்க ஆசைப்படுவது கண்டு ஆழ்வார் வருந்தினார். தன் மனத்துக்கினியவனோடு மணக்கோலம் காண்பதாகக் கனவு கண்டாள். இந்திரன் உள்ளிட்ட தேவர்களெல்லாம் பெண் கேட்டு, அவர்களுக்கெல்லாம் இல்லையென்றாகி, ஸ்ரீமந் நாராயணனே வந்தென்னைக் கைத்தலம்பற்ற, துர்க்கை என்ற நாத்தனார் கூரைப் புடைவையை உடுத்தி மண மாலையை அவள் கழுத்தில் சூட்ட அல்லவா கோதை விரும்பினாள். "மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி- நான்" என்று தோழியிடம் சொன்னாள்.

மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளில் தோழியரோடு நீராடப் புறப்படு

**வீண்பெருமை எவனையும் வீழ்த்திவிடும்.**

கிறாள். ஆண்டாள் தன்னுடைய அன்புக் காதலின் மகத்தான குறிக்கோளை நிற்ற வேற்ற வேண்டி நோற்ற நோன்பு பாவை நோன்பு. மானசீகமாகக் கண்ணனோடு கூடியிருந்து, மனம் குளிர, அவள் வாயிலிருந்து முப்பது பாசுரங்கள் புறப்படு கின்றன. அத்தனையும் உபநிடதத்தின் சாரமாய், முத்துக்குவியலாய், பொற் சரமாய் பொலிகின்றன. திருப்பாவை திருமாலின் திவ்ய புகழைப்பாடுகின்றது. ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைகின்ற பெரும் தத்துவத்தைத் திருப்பாவையிலே பாடிக்கொடுத்திருக்கிறாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள். பக்தியின் சிகரத்தில் வாழ்ந்தவள் கோதை. "கண்ணபிரானே! உன்னிடம் நாம் இரப்பவை பொன்னும், பொருளும், போகமுமல்ல. தேவரீருடைய எவ்வெவ்அவதாரங்களிலும் தேவரீருடைய உறவு உள்ளவர்களாகக் கடவோம். தேவரீருக்கே அடிமை செய்யக்கடவோம். எங்களுக்கு வேறு பொருட்களில் வரும் விருப்பங்களைத் தவிர்த்தருளும் என்று வரம் வேண்டுகிறார்கள். இந்த அற்புதமான வேண்டுகோள் நம்முடைய பிரார்த் தனையாகவும் இருக்க வேண்டும். உலகப் பொருட்களில் உள்ள ஆசைகளை மாற்ற வேண்டும் என்றநிலை நமக்கு வருமேயா னால் திருவடிப்பேற்றுக்குரிய செவ்வி வாய்க்கும். நமது பற்றுக்களை ஒழிக் கவும், பழவினைகளின் தொடர்பை அறுக் கவும் பகவானுடைய நாமசங் கீர்த்தனம் வழிகாட்டும். முன்பு செய்த பாவங்களை யும், இனிமேல் வரவிருக்கும் பாவங்களை யும் நாம சங்கீர்த்தனம் தீயிலிட்ட பஞ்சு போல் ஆக்கிவிடும். ஆண்டாள் தன் ஆர்வப் பெருக்கைத் திருப்பாவையிலும் காதற் பெருக்கைத் திருவாய்மொழியிலும் கொட்டித்தீர்க்கிறாள். ஆண்டாளுக்கு கண்ணனின் எதிரில்யாவும் சூனியம் அதுவே தானற்றநிலை. ஆண்டாள் பரிபக் குவமெய்திய ஆன்மா. ஆன்மாவாகிய நாயகி சர்வ ஆன்ம நாயகனாம் இறை வனைத் தன் நாயகனாகக் காண்கிறது. தன்னை மறந்து, தன்நாமங்கெட்டுத் தலை வன் தாளில் தலைப்படுகின்றது.

ஒருநாள் ஆழ்வார் கனவில் "எம்மை ஆட்கொண்ட உம்மகள் வேறு யாருமல்லள் பூமகளே. அவளுடைய கரம் பிடிக்க யான் காத்திருக்கிறேன். உமது மகளைத் திருவரங்கம் அழைத்து வருக!" என்று நாராயணர் சொன்னார். கனவுகள் மெய்யாவதற்குச் சுபயோக சுபதினத்தில் அழகிய தேரில் ஆண்டாளை அமர்த்தி அலங்காரத்தேர்கள் அணிசூழத் திருவரங் கம் புறப்பட்டார்கள். திருவரங்கம் வந்ததும் அன்னம்போல் நடந்து நாணத்துடன் தலை குனிந்து கருவறையில் அனந்தன்மீது சயனித்திருந்த அரங்கனின் அடிமலரருகே சென்று அமர்ந்தாள். அவன் திருவடி களைப்பற்றி அவனோடு ஒன்றாகிக் கலந் தாள். ஆண்டவளை ஆண்டவன் ஆட் கொண்டது கண்டு அனைவரும் அதிசயித் தார்கள். ஆழ்வாரோ "அருமை மகளைப் பிரிந்து எப்படி வாழ்வேன்" எனக் கண் கலங்கினார். பக்தவத்ஸலன் பட்டர் துயர் கண்டு இரங்கி, ஆண்டாளோடு மணக் கோலத்தோடு அவர் மனம் மகிழக்காட்சி யளித்தார்.

மதுசூதனன் கைப்பற்றக்கண்ட கனவுப்படி அரங்கனோடு ஒன்று சேர்ந்த தெய்வீகப்பாவை, "என்னைப்போல் இறை வனுடன் ஐக்கியமாகுங்கள்" என்று நமக்குத் திருப்பாவையை அளித்தார். ஓங்கி உலகளந்த உத்தமன்பேர் பாடிய

**உண்மையை உணர்ந்தால் துக்கம் தீரும்.**

அந்தக் கோதைவழியில், வங்கக்கடல் கடைந்த மாயவனைக் கேசவனை, மாயனை, வடமதுரைமைந்தனை, ஆயர் குலத்தில் தோன்றிய அணிவிளக்கை ஸ்ரீமந் நாராயணனைச் சென்று சேர்வோமாக.

"கீதை தந்தான் கண்ணன்"
"கோதை தந்தாள் திருப்பாவை"

## திருவாசகத்தில் ஒரு வாசகம்.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயர் என்னுங் காலாற் கலக்குண்டு
காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறென்றென் றெண்ணி
ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்தமில்லா மல்லற் கரைகாட்டி
ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே.

**இதன்பொருள்**

தனித்தவனாகிய நான் பெரியபிறவியாகிய சமுத்திரத்தில், துன்பமாகிய விசாலமாகியதிரை - (அலை)யினால் தூக்கிவீசப்பட்டு பற்றுக்கோடு எதுவுமில்லாமல் கொவ்வைக் கனியை ஒத்த பவளநிறமான வாயையுடைய பெண்கள் ஆகிய காற்றினால் மனக்கலக்கம் உண்டாக்கப்பட்டுக் காமஇன்பமாகிய சுறாமீனின் வாயில் அகப்பட்டு இனி உய்யும்வழி யாதுஎன ஆராய்ந்து துணிந்து திருவைந்தெழுத்தாகிய தெப்பத்தைத் துணையாய்ப் பிடித்தவனாய் நின்ற அறிவற்ற மூர்க்கனான எனக்கு உலகம் அனைத்துக்கும் முதல்வனான நீர், தொடக்கமும் முடிவுமில்லாத வளம்மிகுந்த இன்பத்தின் கரையைக்காட்டி ஆட்கொண்டீர், (இதற்கு நான் செய்யுங்கைம்மாறில்லை.) (பௌவம் - சமுத்திரம், எவ்வம் - துன்பம், கால் - காற்று, புணை - தெப்பம், மல்லல் - வளம்.)

இச்செய்யுளில் பிறவியைச் சமுத்திரமாகவும் துன்பங்களை அலைகளாகவும், பெண்ணாசையைக் காற்றாகவும், பெண்களாற்பெறும் சிற்றின்பத்தைச் சுறாமீனாகவும் உருவகப்படுத்தியதோடு இவ்வாறான உலகவாழ்விற் சிக்குண்டு நிற்பதாகிய பிறவியாகிய கடலைக்கடப்பதற்குத் திருவைந்தெழுத்துத் தெப்பமாக உருவகப்படுத்தப்பட்டமை சிந்தனைக்கினிய ஒன்றாகும். அன்றியும் 'கிடக்கின்றேனை' என்பது செயலற்ற நிலையைக் குறிப்பதாய், நாவுக்கரசரின் 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னுங் கூற்றையும் பட்டினத்தடிகளாரின் "நின் ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே" என்னுங்கூற்றையும் நினைவுபடுத்துவதாகும்.

ம. கந்தையா

**மனத்தை மெல்ல மெல்ல அடக்கவேண்டும்.**

உ

(தொடர்ச்சி...

# இளைஞர்களே விழித்துக்கொள்ளுங்கள்

திரு இரா செல்வவடிவேல் அவர்கள்.

காதல் என்பது இன்றைய இளைஞர்களின் விஷக்க்காய்ச்சலாகும். வாழ்வில் இறுதிவரை இணைந்து வாழ்வதற்குத் துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். சினிமாக்கவர்ச்சியாக உருவாகும் காமம் எப்படிக் காதலாக முடியும். திருமணத்தில் இணையும் பலர் இன்று ஓராண்டுக்குள் வாழ்க்கை கசந்து விவாகரத்தை எதிர் நோக்கி ஓடும் அவலநிலை ஏற்பட்டு வருகின்றது. இந்நிலை தமிழர் பண்பாட்டைச் சாக்கடைக்கு கொண்டு சென்றுவிடும். சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் நமது சைவசமயம் விளக்கியது போன்று வேறு எம்மதமும் விளக்கியதில்லை. குடும்ப வாழ்வைக் கட்டாயப்படுத்திய சமயம் நமது சைவசமயமாகும். லௌகீக வாழ்வை நெறிப்படுத்தவேண்டும் என்பது தான் முக்கியமான விடயம் திருக்குறளின் காமத்துப்பால் இல்வாழ்வின் இன்பத்துப் பால் ஆகும். ஆணும் பெண்ணும் எத்தகையவர்களாக இருக்கவேண்டும் என்பது முதல் அத்தனை விடயமும் வள்ளுவப் பேராசான் போதனையாக அல்லாமல் உடன்பட்ட நிலையில் நின்று தெளிவாக்கியுள்ளான். இளைஞர்களே! இடையையும் மற்றைய உறுப்புக்களையும் கவர்ச்சியாகக்கண்டு மதிமயங்கி உன்வாழ்வை இழந்து விடாதே! காதல் ஓவியங்கள் இலக்கியங்கள். இலக்கியத்தில், இராமன் சீதை பாத்திரங்கள் சிறந்த எடுத்துக் காட்டு. இராமன் சீதையைக்கண்டான். தன்னை இழந்தான். அன்று இரவு தூக்கம் கொள்ளவில்லை. தனது எண்ணத்தை மீட்டுப்பார்க்கின்றான். எத்தனையோ இளம் நங்கையரைக் கண்டிருக்கிறேன் யார்மீதும் ஏற்படாத உணர்வு இந்தப் பெண்ணைக் கண்டதும் ஏற்பட்டு விட்டதே. ஒருகால் இவள் திருமணமானவளாக இருப்பின்? அடுத்த கணம் இராமன் மனம் பேசுகிறது. எனது எண்ணம் ஒருபோதும் தவறு செய்யாது நிச்சயம் இவள் திருமணம் ஆகாதவளாகவே இருப்பாள். எத்தனை இளைஞர்களுக்கு இந்த எண்ணம்வரும். எண்ணத்தில் தூய்மை உடையவர்களுக்கல்லவா இத்தகைய நிலைவரும்.

அடுத்து சீதையின் நிலையைப் பார்க்கலாம். தோழிப்பெண் நிளமாலை வில்லொடிந்த செய்தி தாங்கி ஓடிவருகிறாள். சீதையிடம், அம்மா! யாராலும் தூக்கமுடியாதவில்லை அந்த சடாமுடி முனிவன்... சீதையின் உயிர் இந்த இடத்தில் உடலைவிட்டுப் போய்விட்டது. ஏன். தன் மனத்திற் குடிகொண்ட நாயகனைவிட்டு உடன்வந்த முனிவன்வில்லை ஒடித்துவிட்டானே என்று பதற்றத்தில் எண்ணுகின்றாள். நீளமாலை தொடர்கின்றாள். அந்தச் சடாமுடி முனிவனுடன் வந்த கரிய செம்மல் ஒடித்தான் என முடித்தாள். சீதைக்குப்போன உயிர் மீண்டது உடலினுள் என்பான் கம்பன். தூய காதலுக்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா, இத்தகைய சிறந்த வாழ்க்கை நெறிகளைக் கூறும் இதிகாச, புராணங்களை நம் கல்வியில் இணைத்து முழுமையாக இரசனையுடன் போதிக்கும் நல்லாசான்களின் தேவையை உணரமுடிகிறதா?

**ஒருபோதும் நம்பிக்கையை இழந்துவிடாதே.**

இளம் சமுதாயமே சிந்தியுங்கள். வாழ்க் கையை வளம்படுத்துங்கள்.

நம்நாட்டில் முதியோர் இல்லங்கள் பெருகிவருகின்றன. இது தமிழன் தன் விழுமியத்தை இழந்து வருகிறான் என்பதற்கான பறை அறிவிப்பாகும். தாய், தந்தை, பாட்டன், பாட்டி இன்று சுமை யாகிவிட்டார்கள். அவர்கள் நம்மைச் சுமையாகக் கருதியிருந்தால்....! எங்கோ தெரு ஓரத்தில் வீசப்பட்டிருப்போம். இது வும் நவயுகத்தில் ஆரம்பமாகிவிட்டது. பிறந்த குழந்தையைக் குப்பைத் தொட்டி யினுள்ளே போடும் தாய், மகனைக் கொலை செய்த தந்தை... தித்திப்பான செய்திகள் தாங்கி நம் நவரசபத்திரிகை கள் வந்து கொண்டிருக்கின்றன. எங்கே? மனிதநேயம்! பெரியோரைக் கனம் பண்

"எனக்கு மொத்தம் மூன்று சன்
என்னைக் காக்கும் சன் - பென்சன்"
-புதுக்கவிதை-

கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்வதைவிட அதிக புண்ணியம் பெரிய வர்களைக் காப்பது. பெற்றவரை, முதிய வரைக் கவனிக்காது, புண்ணியம் தேடிக் கங்கைக்குப் போனவனுக்கு கங்கை தெரியவில்லை என்பது நமது புராணங் கள் சொன்ன அர்த்தமுள்ள கதையாகும். ஒரு தடவை குருமுனி அகத்தியர், கான கத்தில் ஒரு குடிசையை நோக்கி வந்தார். வாசலில் குரல் கொடுத்தார். உள்ளே யிருந்து சிறுவன் ஒருவன் வெளியே வந்தான். முனிவரை வணங்கினான் அமருங்கள் என்று திண்ணையைக் காட்டி விட்டு உள்ளே சென்று விட்டான். நேரம் கடந்தும் சிறுவன் வெளியே வரவில்லை. அகத்தியருக்குக் கோபம் வந்துவிட்டது. ணாத சமுதாயத்திற்குப் பசுமைவாழ்வு எப்படிவரும்? பிள்ளைகள் பெரியோரைக் கைவிடும் பொழுது வளர்ந்துவரும் உங்கள் பிள்ளைகளால் நீங்கள் எங்கே போவீர்கள் என்பதைச் சிந்தியுங்கள். பிள்ளைகளை அருகில் வைத்துக் கொண்டு பெரியவர்களைத் திட்டுவதும் துன்புறுத்துவதும் மிகப்பாதகமான எதிர் காலத்துன்பத்தை உங்களுக்குத் தரும் என்பதைத் தயை கூர்ந்து உணருங்கள். மேலை நாடுகளில் முதியோர் நன்மை களை அரசே கவனிக்கிறது. இந்தச் சேவையைச் சிறப்பாக ஆற்றிவரும் தொண்டர் ஸ்தாபனங்களை நன்றியுடன் நோக்குகிறேன். உங்கள் சேவை மகேசன் சேவை?

உரத்த குரலில் சிறுவனை அழைத்தார். சிறுவன் வெளியே வந்தான். அகத்தியர் சீறினார். சிறுவன் முனிவரே கோபம் ஆகாது. உள்ளே எனது கண் தெரியாத பெற்றோருக்கு உரிய கடமை களைச் செய்து கொண்டிருந்தேன். அத னால் தாமதமாகியது என்றான். முனிவர் மகிழ்ந்து சிறுவனை வாழ்த்தியதாக வர லாறு பேசுகிறது. இவற்றைப் படிப்போ மாக! பயன் பெறுவோமாக!

இளைஞர்களே விழித்துக் கொள் ளுங்கள். உங்கள் கைகளில் நம்தேசம் இருக்கிறது. நம் தேசம் நிலத்தளவில் இருந்து பயனில்லை. அங்கே நல்ல சிந்தனையிருக்க வேண்டும். நல்லவர் இருக்கவேண்டும். (முற்றும்)

எவ்வழி நல்வழி
அவ்வழி இருப்பதே நாடு
அதுவே நம்நாடாகட்டும்.

**பலவற்றை ஒன்றாக்குவது அன்பின் குணம்.**

உ

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

**சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்.**

[தெய்வத் தமிழ் என்று போற்றப் படும் பன்னிரு திருமுறைகளிலே பத்தாம் திருமுறையாகத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரம் திகழ்கிறது. "தோத்திரத் திற்குத் திருவாசகம், காத்திரத்திற்குத் திருமந்திரம்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். தமிழர்களின் சிந்த னையில் முகிழ்த்த தத்துவமாகிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை முதலில் எடுத்து விளக்கிய ஞானப்பெருநூலாகத் திருமந்திரம் காணப்படுகிறது. திருமந்திரம் ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு ஆன்ம நாட்டத்திற்கும் ஞானத்தோடு இணைந்த பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற் சியைத் தரும் நூலாகவும் உள்ளது. தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை அனு பவ ஞானத்திருநூல் என்றே ஆன்றோர் கள் அனைவரும் போற்றுகின்றார்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ்வின் இறுதி இலட்சியமாகிய வீடுபேறு அடைவதற்கும் உரிய வாழ்க்கை நெறி களைத் திருமந்திரம் வகுத்துக் காட்டி யுள்ளது. இந்நூல் யோக நூலாக, வைத் திய நூலாக, வாழ்க்கை நூலாக, தத்துவ நூலாக பலவகைகளில் மானுட சமூகத் திற்கு வழிகாட்டும் நூலாக மிளிர்கிறது. சைவத் தமிழ் மக்களின் பொக்கிஷமாக இருக்கும் இந்நூலின் பெருமையினைச் சைவமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தனி மனிதனிடமும் உள்ள ஆன்மஞானத்தினைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்வதற்காகச் சந்நிதியான் ஆச்சிரமத்தினர் கடந்த எட்டு வருடங் களிற்கு மேலாக ஞானச்சுடர் என்ற மாதாந்தச் சஞ்சிகையை வெளியிட்டு வரு கிறார்கள். இம்மலர் ஆரம்பித்த கால முதல் பன்னிரு திருமுறைகளை மைய மாகக் கொண்டு "திருமுறைச் செல்வம்" என்ற பெயரில் தொடர் கட்டுரைகளை இம்மலரில் எழுதிவந்தேன். தொடர்ந்து "ஸ்ரீ முருகமந்திரம்" என்ற தலைப்பில் கந்தரனுபூதி பற்றித் தொடர் கட்டுரை களை எழுதியிருந்தேன் விரைவில் அக்கட்டுரைகளை ஒரு நூல் வடிவமாகக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள் ளேன்.

ஞான பண்டிதன் சந்நிதி வேல வனின் திருவருள் துணையோடு ஞானச் சுடர் மலரில் "தவமுனிவனின் தமிழ் மந்திரம்" என்ற தலைப்பில் தொடர் கட்டு ரைகளாகத் திருமந்திரத்தைப் பற்றி எழுத எண்ணியுள்ளேன். அடியேனைக் கருவி யாகக் கொண்டு சந்நிதி வேலவன் இக் கைங்கரியத்தைச் செவ்வனே நிறை வேற்றி முடிப்பதற்குக் குருவாக இருந்து வழிகாட்டல் வேண்டும் என்று பிரார்த்திக் கின்றேன். ஞானச்சுடர் வாசகர்கள் கட்டு ரையை வாசித்துத் தங்களது கருத்துக் களையும் ஆலோசனைகளையும் வழங்கி உதவுவார்களாக என அன்புடன் வேண்டு கின்றேன்.]

## திருமூலர் வரலாறு

திரு என்றால் தெய்வத் தன்மை உடையது என்பது பொருள். நூலின்

**உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டமாகும்.**

ஆசிரியர் பெயர் திருமூலர் நூலின் பெயர் திருமந்திரம். இந்நூலின் சிறப்பிற்கு இவையே காரணம் ஆகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமூலரை நம்பிரான் என்றும், சம்பந்தரை எம்பிரான் என்றும் அழைக்கின்றார். சுந்தரர் மிகவும் அன்பு உரிமையோடு "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று திருமூலரைத் திருத்தொண்டத் தொகையிலே குறிப்பிடுகிறார்.

திருக்கைலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலின் முதற்பெரும் காவலர் திருநந்திதேவர் இவர் இந்திரன், திருமால், பிரமன் முதலான தேவர்களுக்கும் சிவநெறியினை அருளும் பணியினர். அந்த நந்தியெம் பெருமானிடம் அருள்பெற்ற சிவயோகியார் பலர் உளர். திருமூலரின் சொந்தத் திருப்பெயர் சுந்தரன் என்பதாகும். இவர் வடகைலையில் நடைபெற்ற குருகுலத்தில் சேர்ந்து அறிவு நூல்களாம் வேதாகமங்களை நந்தியெம் பெருமானிடம் கற்றார். நாதர் என்று பட்டம் பெற்றுச் சுந்தரநாதராய்த் தவம் செய்து வாழ்ந்திருந்தார். இங்கு இவருடன் பயின்றோர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், சிவயோகமாமுனிவர் ஆகிய எழுவராவர்.

சிவயோகி சுந்தரநாதன் அகத்திய முனிவரிடம் நட்புக்கொண்டிருந்தார். அந்த நட்பின் ஆர்வத்தால் அகத்திய முனிவருடன் சில நாட்கள் தங்கியிருக்கவேண்டும் என்று விரும்பி வடகைலையிலிருந்து புறப்பட்டு நற்றமிழ் கமழும் பொதியமலையை நோக்கிப் பயணம் சென்றார்.

அவர் தமிழ்நாடு நோக்கி வரும்போது வழியில் உள்ள திருக்கேதாரம் என்னும் தலத்தை வழிபட்டுப் பசுபதி நேபாளத்தினைப் பணிந்து துதித்தார். நேபாளம் சிவநெறியில் நிற்கும் அரச மரபைக் கொண்டதாகையால் பசுபதி நேபாளம் எனப்பெயர் பெற்றது. பின்பு அவர் கங்கைக்கரையை அடைந்து கங்கைத்துறையிலே நீராடினார்.

கங்கையில் நீராடிவிட்டு அவிமுத்தமாகிய காசித் தலத்தைப் பணிந்து துதித்தார். பின்பு ஸ்ரீ சைலம் சென்று இறைவனை வணங்கினார். திருக்காளத்திமலைக்குச் சென்று வழிபட்டார். இறைவன் அருட்கூத்தாடும் மன்றங்களில் ஒன்றாகிய திருவாலங்காடு சிவஸ்தலத்திற்குச் சென்று வணங்கினார். காஞ்சிக்குச் சென்று திருஏகாம்பரநாதரை வணங்கிச் சிவயோகிகள் சிலரோடு சில நாட்கள் தங்கியிருந்தார். திருவதிகைவீரட்டாணம் சென்று வணங்கிவிட்டுச் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவமாடும் தில்லையம்பலப் பதியினை (சிதம்பரம்) வந்தடைந்தார். இங்கு சில காலம் தங்கியிருந்து நடராஜப் பெருமானது தரிசனத்தைப் பெற்ற பின்பு காவிரி நதியில் நீராடி அதன் தென்கரையில் இருக்கும் சாத்தனூர் என்ற கிராமத்தை அடைந்தார்.

## சாத்தனூரில் பசுக்களின் துயரத்தினை நீக்கிய வரலாறு.

இங்கு ஓரிடத்தில் பசுக்கள் கூட்டமாக நின்று கதறிக்கொண்டிருப்பதைக் கண்டார். அருகே சென்று பார்த்தபோது பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த மூலன் என்னும் இடையன் இறந்து கிடப்பதையும் அதன் காரணமாகப் பசுக்கள் துன்புற்றுத் துடிக்கின்றன என்பதையும் உணர்ந்து

**அன்பும் சிறப்பும் இல்லையேல் மகிழ்ச்சி இல்லை.**

அவற்றின் துயர் துடைக்க நினைத்தார். தன்னுடைய யோகசித்தியினாலே தன் உடலை ஓரிடத்தில் மறைத்துவிட்டுத் தன் உயிரை மூலன் ஆகிய இடையனின் உடம்பிற்குள் புகவிட்டார். அட்டமா சித்திகளில் ஒன்றாகிய பிரகாயப் பிரவேசம் என்ற சித்தினால் இச்சாதனையைச் செய்தார். உடனே மூலன் தூங்கியெழுவது போன்று உயிர் பெற்றெழுந்தான். எஜமானன் இறந்த துக்கத்தால் கதறிய பசுக்கள் ஆனந்த மேலீட்டால் துள்ளிக் குதித்தன. தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்து முகமாகப் பசுக்கள் மூலனை மோந்தன; நக்கின; தங்களுடைய சந்தோஷத்தைப் பல வகையில் வெளிக்காட்டிக் கொண்டன.

மாலையானதும் பசுக்கள் எல்லாம் மேய்ச்சல் நிலம் விட்டு வீடு நோக்கிப் போகத் தலைப்பட்டன. யோகியும் அவற்றுடனே போனார். பசுக்களின் குரல் கேட்டு மூலனின் மனைவி வீட்டின் உள்ளிருந்து வந்து மூலனை வரவேற்றாள். நிலைமையைப் புரிந்து கொண்டுவிட்ட யோகி தமக்கும் உமக்கும் ஒரு தொடர்பில்லை எனக்கூறி வந்த வழியே திரும்ப மூலன் மனைவி தனது கணவனுக்குச் சித்தம் கலங்கிப் பித்தம் பிடித்துவிட்டது என்று தனது நாயகனின் நிலையை ஊரிலுள்ள நீதிமான்களிடம் சென்று முறையிட்டாள். அவர்கள் திருமூலரை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உற்று நோக்கினார்கள். இவருக்குப் பித்துப் பிடிக்கவும் இல்லை. சித்தம் கலங்கவும் இல்லை. சிவபோகப் பேரின்பத்தில் அவர் திளைத்திருக்கின்றார். என்ற உண்மை நிலையை மனைவிக்கு உணர்த்தினார்கள். யாராலும் அடைய முடியாத பேற்றினை இவர் பெற்றிருக்கின்றார். இறைவனது திருவருளைப் பெற்ற சீவன் முத்தராக மாறிவிட்டார் என்று அவர் அடைந்திருக்கும் ஞான நிலையினைப் பிரபஞ்ச மயக்கத்தில் இருக்கும் அவருடைய மனைவிக்கு எடுத்துக் கூறினார்கள். தவயோகியாகிய திருமூலநாயனார் பெற்றிருந்த ஞானநிலையினைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு பெரியபுராணத்தில் விளக்குகின்றார்.

பித்துற்ற மயலன்று பிறிதொரு சார்புளதன்று
சித்த விகற்பங் களைந்து தெளிந்த சிவயோகத்தில்
வைத்த கருத்தினராகி வரம்பில் பெருமையிலிருந்தார்
இத்தகைய அளப்பரிதால் யாராலும் என உரைப்பார்

தனது உடம்பை மறைத்து வைத்த இடத்தினை நோக்கிச் சென்ற திருமூலர் அந்த இடத்தை அடைந்து தமது உடம்பினைத் தேடிப் பார்த்தார். தான் வைத்து விட்டு வந்த இடத்தில் உடம்பினைக் காணவில்லை. சிவயோகியாரது முன்னைய உடம்பினை இறைவன் மறைப்பித்து விட்டார். சிவாகமங்களின் அரும் பொருளினைத் திருமூலரது வாக்கால் தமிழில் கேட்கவிரும்பிய இறைவன் தனது உடலினை மறைப்பித்தார் என்பதை ஞானத்தினால் உணர்ந்தார். சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தித்த வண்ணம் திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார். இக்கோயிலின் மேற்குத் திசையில் உள்ள அரசமரத்தின் கீழ் தேவாசனத்தில் சிவயோகத்தில் அமர்ந்து சிவப்பரம் பொருளுடன் உணர்வினால் ஒன்றி

**இன்று நாம் செய்யும் நன்மையே நாளைய இன்பம்.**

யிருந்தார். சிவராஜயோக நிஷ்டையில் இருந்து இதயக் கமலத்தில் எழுந்தருளி யுள்ள இறைவனுடன் இரண்டறக் கலந்து சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த நிலை யினைப் பெற்றார். பரம்பொருளாகிய சிவபெருமானைப் போற்றி "ஒன்றவன் தானே" என்று தொடங்கி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைப் பாடி உலகிற்கு வழங்கியுள்ளார்.

## திருவாவடுதுறையில் நடைபெறும் கோ பூஜை

கோமாதா என்று அழைக்கப்படும் பசுவில் எல்லாத் தெய்வங்களும் வீற்றிருக் கின்றன. தாய்க்குச் சமமான பசுவைப் பூசிப்பவர்களுக்குச் சர்வ மங்களங்களும் வாழ்வில் உண்டாகும். திருமூலரின் பசுப் பணியை நினைவு கூரும் முகமாக திருவா வடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத் தில் நடைபெறும் மகோற்சவ விழாவின் இரண்டாம் நாளன்று சிறப்பான நிகழ்ச்சி நடாத்தப்பட்டு வருகிறது. அன்று காலை திருவீதியுலாவில் பெருமானுடன் திருமூல தேவநாயனாரும் எழுந்தருளுகின்றார். அவர் மேற்கொண்ட பசுப்பணியின் நினை வாக அவருக்கு முன்பாகப் பசுமாடு ஒன்று கன்றுடன் கொண்டு செல்லப்படுகிறது. திருவுலா முடிந்து ஆலயத்தை அடைந்த தும் சந்நிதியிலே ஆதீன ஓதுவார் மூர்த்தி களால் திருமூலர் வரலாறு வாசிக்கப்படு கிறது. உடனே கோபூஜை நடைபெற்று தீபாராதனை இடம்பெறுகிறது.

(தொடரும்...

### மயில்வான சுவாமி போற்றி!

மயிலேறி விளையாடிய வேலவனை
மனதோடு விரத பூசனை யாற்றியகுருவே
மகிழ்வோடு மாந்தரை அரவணைத்த சுவாமி
மயில்வாகனனார் திருத்தாள் போற்றி


மானிடவடிவில் மானசத்தெய்வமாய்
மாண்புடன் வெண்ணீறு உருத்திராக்கம்
மாமலைநாயகன் தாரக சரவணபவ
மந்திரம் செபித்த மயில்வாகனார் போற்றி

குருநாதனின் ஞான அருள்நாதனாய்
குறைதீர்க்க மயிலேறிய நாயகனும்
குறமகள் கொழுணன் மாண்போடு ஏற்ற
குருஜீ மயில்வாகன நாதனே போற்றி

சைவப்புலவர்
க. நித்தியதசீதரன்

**இறையருளிற்கு எப்போதும் பஞ்சமில்லை.**

உ



# குடிமக்களும் கோயில்களும்

**திரு நா. நல்லதம்பி அவர்கள்.**

இந்த உலகமும் இங்குவாழும் உயிரினங்களும் இயங்குவதற்கு எங்கோ ஒரு உந்துசக்தி இருக்கிறது. அந்தச் சக்தியானது, உலகின் எல்லாப் பொருட் களுக்கும் அப்பாற்பட்டதாக, அதேநேரம் எல்லாப் பொருள்களுள்ளும் நிறைந்து கலந்ததாக இருக்கிறது. அது எமது உள்ளத்தால் "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்" என்று எண்ணமுடியாத தாக, எல்லாவற்றையுங் கடந்ததாக இருப் பதால் அதற்குக் 'கடவுள்' என்று மெய்ஞ் ஞானியர் பெயர் சூட்டினர்.

இந்தக் கடவுளை வணங்குவதற் காக மக்கள் ஒன்று கூடிய இடமே 'கோயில்' எனப்பெறுகிறது.

அங்குமிங்கும் அலைந்து திரிந்து உணவுதேடி, குகைகளிலும் காட்டுமர நிழல்களிலும் விலங்குகள் போல வாழ்ந்த மனிதன், தனக்கு இருக்கும் ஆறாவது அறிவின் ஆற்றலை உணரத்தொடங்கிய போது, நிலையான குடிசைகளை அமைத் துக்கொண்டு கூடி ஒரு சமுதாயமாக வாழத்தொடங்கினான். பயிர்களை வளர்த் தான். தனக்குத் தேவையான மிருகங் களையும் வளர்த்தான்.

அப்போது, அவனுக்கு நிறையு ஆறுதல் கிடைத்தது. தனக்கு மேலான, தினசலனம் வருடசலனம் என ஒரு ஒழுங்குமுறையில் இயங்கச் செய்கின்ற அந்தப் பொருளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

அந்தப் பொருளுக்கு, அந்தச் சக்திக்குத் தலை வணங்கினால் தான் தனக்குப் பாதுகாப்பும் நல்வாழ்வும் கிடைக் கும் என எண்ணிய மனிதன், உள்ளங் கடந்து நிற்கும் அருபியான அந்தக் கட வுளை வணங்க ஆரம்பித்தான்.

இவ்வாறாக, "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" ஆகக் கொண்ட இறைவனுக்கு ஆலும் அரசும், வாகையும் வேம்பும், வன்னியும் இத்தியும், கடம்பும் மருதும் திருத்தலங்களாயின. செப்பனிடப் பட்ட ஒரு கல்லு மூலமூர்த்த மானது. பூசையும் பொங்கலும் விழாக் களும் நடைபெற்றன. அவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி வழிபாடு செய் தனர்.

இப்படியாக ஆரம்பித்த கோயில் கள் சிறுகுடில்களாகவும் குகைக்கோயில் களாகவும் கற்கோயில்களாகவும் குடை வரைக் கோயில்களாகவும் வளர்ச்சிபெற் றன. பண்டைய மன்னராட்சிக் காலத்தில், மன்னர்களின் வழிகாட்டலும் பொருளீட் டலும் இவ்வளர்ச்சிக்குப் பேருதவியாயிருந் தன.

கி.பி 5ம் நூற்றாண்டுக் காலப்பகுதி யில், கற்கோயில்களும் குடைவரைக் கோயில்களும் தோற்றம் பெற்றபோது, சிற்ப, சித்திரக் கலைகளும் வளர்ந்தன. இத்தகைய வளர்ச்சியில் மாமன்னன் மகேந்திரனின் பங்கு அளப்பரியது எனச் சரித்திரம் கூறுகின்றது.

சிற்பக்கலை வளர்ச்சி பெற்ற போது, சிற்பக்கலை பற்றிய பலநூல்கள் தோன்றுவதற்கும் அவ்வக்கால அரசர்கள் காரண புருஷர்களாக இருந்தனர்.

**உன்னைப் போலவே அயலானையும் நேசி.**

இந்துமத, கலைகலாச்சாரம் சம்பந்தமாகச் சிந்துநதிப் பள்ளத்தாக்கிலும் பிற இடங்களிலும் கண்டெடுக்கப் பெற்ற புதைபொருட்கள் எல்லாம் இந்துக் கோயில்களிலேயே சிற்பக்கலை ஆரம்பமானது என்பதை உணர்த்துவனவாயிருக்கின்றன.

அதுபோலவே, இசை, நடனம், நாட்டியம், கூத்து என்பனவும் கோயிலை மையமாகக் கொண்டே தொடங்கப் பெற்றன எனலாம். அவை அரங்கேறிய இடமும் கோயிலாகவே இருந்தது.

இந்தவகையிலே, கோயிலை வளம்படுத்துவதற்காக நாதசுரம் மேளம் முதலிய வாத்தியக்காரர்களும் திருமுறை ஓதுபவர்களும் கோயில் நிர்வாகத்தின் கீழ் தோன்றினார்கள். அவர்களை ஆதரிக்கும் பொறுப்பும் கோயிலின்பாற்பட்டதாகவே இருந்தது.

கோயில்களை மக்கள் கட்டினார்கள். அவற்றின் பராமரிப்புக்கான சொத்துக்களையும் சேர்த்து வைத்தார்கள். அந்த வருமானத்தில் நித்திய நைமித்திய பூசைகளும் விழாக்களும் நடைபெற்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செலவீடுகளும் மேற்கொள்ளப்பெற்றன.

கோயில்களை மக்கள் பராமரித்தார்கள்; அதே நேரம் மக்களைக் கோயில்கள் பராமரித்தன என்பதுவும் இங்கே முக்கியமாகக் கொள்ளவேண்டியதாகும்.

மக்களின் இன்ப துன்பங்களுக்கான உதவிகளைச் செய்வதும் அல்லாமல், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் கோயில் நிதி பயன்படுத்தப்பெற்றமை ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

அந்தந்தப் பகுதியில் விளங்கிய கோயில்கள், அந்தந்த ஊர்மக்களின் அரசியல், பொருளாதாரம், சமூகநலன், முதலிய எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு உதவி செய்வனவாக விளங்கின. கல்வி நிலையங்களும் மருத்துவ நிலையங்களும் கோயில்களால் நிர்வகிக்கப்பெற்று விளங்கின. ஏழை மக்களின் பசிப்பிணி போக்கியது "அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலமும்," அதுபோன்ற கோயில்களுமே என்பதை நாம் உணர்வோமாக.

இப்படியான பலவகையான நிர்வாகங்களைக் கொண்டு அக்காலக் கோயில்கள் இயங்கினவென்றால், அக் கோயில்களில் மக்களுக்கு நிறைய வேலைவாய்ப்புக்களும் இருந்துள்ளன என்பது சொல்லவேண்டியதில்லை. முக்கியமாக, கோயில் வருடாந்த விழாக்காலங்களிலும், திருப்பணிவேலைகள் இடம் பெறும் காலங்களிலும் மக்களுக்கு ஊதியம் பெறும் வாய்ப்புக்கள் அதிகம் இருந்துள்ளன.

மேலும், ஊரில் மக்களிடையே உண்டாகும் பிணக்குக்களை அவ்வூர்க் கோயில் நிர்வாகமே தீர்த்துவைத்துள்ளமையை நாம் அறியமுடிகிறது. உதாரணமாக, சுந்தரமூர்த்திசுவாமிகளின் வழக்கு, தில்லைவாழ் அந்தணர்களால் தீர்த்து வைக்கப் பெற்றமையைக் குறிப்பிடலாம்.

மற்றும், கோயில்களில் கடவுளுக்காகப் படைக்கப்பெறும் நிவேதனப் பொருட்கள், திட்டமிடப்பட்டவகையில் சத்துணவுப் பொருட்களாக இருப்பதனையும் நாம் அவதானிக்கலாம்.

இவ்வாறு, முற்காலத்தில் கோயில்கள் அந்தந்த ஊர் மக்களுக்கு எல்லா வகையிலும் வழிகாட்டிகளாக இருந்துள்ளன.

**துடிப்பான எண்ணம் சோககீதம் பாடாது.**

எமது சைவநெறியானது அன்பு நெறியாக, வாழ்க்கைநெறியாகக் கொள்ளப்பெறுவதற்குச் சமயம் தோன்றிய காலமுதல் கோயில் தோன்றிய கால முதல் மக்களால் கைக்கொள்ளப் பெற்று வந்த நிர்வாக முறைகளே காரணமாக இருக்கின்றன என்று சொல்வதில் மிகை யொன்றும் இல்லை.

மக்கள் தமது பணிகளைத் தர்ம உணர்வோடு மனிதாபிமான உணர்வோடு செய்தனர். கோயிலை மக்கள் வளம் பெறச்செய்தனர்; கோயில் மக்களை வளர்த்தெடுத்தது. அப்போதுதான், மக்கள் மனத்திலே, கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்னும் உணர்வு தோன்றியிருக்க வேண்டும்.

## சந்நிதியானின் புகழ் பாடி வரும் ஞானச்சுடரே

ஞானச் சிந்தனை தாங்கிவரும் ஞானச்சுடரே
நீ நானிலம் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
ஐயம் தீர்த்து வைக்கும் ஞானச்சுடரே
நீ வையகம் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
அறிவியல் சிந்தனை தந்திடும் ஞானச்சுடரே
அறிஞர்கள் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
எம் அறியாமை நீக்கி விடும் ஞானச்சுடரே
நீ வானவர் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
சந்நிதியானின் புகழ் பாடி வரும் ஞானச்சுடரே
பக்தர்கள் மனம் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
திருக்குறளை தாங்கி வரும் ஞானச்சுடரே
நற்சிந்தனை ஏந்திவரும் ஞானச்சுடரே
நல்லடியார் உள்ளம் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
ஞானக் கவிதாங்கி வரும் ஞானச்சுடரே
ஞானிகள் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
மன அமைதி தந்திடும் ஞானச்சுடரே
மாந்தர்கள் போற்றிட வாழ்ந்திடு ஞானச்சுடரே
தெய்வசிந்தனை ஏந்திவரும் ஞானச்சுடரே
தெய்வம் வாழ்த்திட பூமாதேவியை வலம் வருவாய் ஞானச்சுடரே.

*-ரோசா-*

## கோபுர நிழல்

கோவிலுக்கு நேர் எதிர் வீட்டில் குடி இருக்கக்கூடாது என்கிறார்கள். கோவிலுக்கு நேர் எதிரில் .வீடு இருந்தால் கோபுர நிழல்படும். எனவே, அந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு வளம் குன்றும் என்பது ஆன்றோர் கருத்து. அதனால் தான் சந்நிதிக்கு எதிரில் விநாயகர் கோவில் அமைப்பார்கள். ஆனால், நெருக்கம் உள்ள நகரங்களில் இவற்றை அனுசரிக்க இயலாது.

**தேவையற்ற விவாதங்கள் செய்தல் தீமைதரும்.**

உ

(வைகாசிமாதத் தொடர்ச்சி..



# அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழும் கிருபானந்தவாரியார் சுவாமிகள் பொருளுரையும்

**திரு S.S. ரஜீந்திரன் அவர்கள்.**

**இராவணன்**

இலங்காபுரியை ஆண்ட தசக்கிரீவன் என்னும் அரக்கன் புஷ்பக விமானத்தில் ஏறி வடதிசை நோக்கிச் சென்றான். விமானம் பெருமலை ஒன்றைக் கண்டவுடன் செல்ல முடியாமல் தடைப்பட்டு நின்றது. தசக்கிரீவன் விமானத்தைப் பல முறை இயக்கினான். விமானம் நகரவில்லை.

அப்போது அம்மலையில் காவல் புரிந்த திருநந்திதேவர் “தசக்கிரீவா! இம் மலையானது கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக் கயிலாயமலையாகும். இதனை நவகோள்களும் வலம் வருகின்றன. இதன் மேலாகச் செல்வது பாவம். ஆகவே நீ மலையைச் சுற்றிப் போ” என்று கூறினார்.

இளமைச் செருக்குடைய அவ்வரக்கன் “குரங்கு போல் முகமுடைய மாடே! நீ எனக்குப் புத்தி புகல்கின்றனையோ! உன்னையும் இம் மலையையும் பெயர்த்து எறிவேன்” என்று கர்ச்சித்தான்.

“உனக்கு அறிவுரை கூறினால் நீ என்னைக் குரங்கு முகம் என்று இகழ்கின்றனை. எனவே குரங்கினால் உனது நகரம் அழியக்கடவது” என்று சாபமிட்டார் திருநந்திதேவர். (அதனாலேயே பின்னை நாளில் அனுமரின் வாலில் மூட்டப்பட்ட தீயினால் இலங்காபுரியே எரிந்து அழிந்தது என்பதனைத் தெளிக)

இதைக்கேட்ட தசக்கிரீவன் வெகுண்டு, விமானத்தை விட்டு இறங்கிக் கயிலாய மலையைப் பெயர்க்கத் தொடங்கினான்.

அவ்வேளையில் மலையின் மேல் அமர்ந்திருந்த சிவபெருமானைப் பார்த்து, “சுவாமி! அகில உலகங்களும் சக்தியால் தானே இயங்குகின்றன என உமாதேவியார் கேட்டார். “ஆம்” என்றார் சுவாமி. “எம் பெருமானே! ‘எல்லாம் சிவமயம்’ என்று வேதம் புகல்கின்றதே நீங்கள் இப்படி என்னை உயர்த்திக் கூறுகின்றீர்கள்” என்று சிறிது பிணங்கினார் உமாதேவியார். பெண்கள் கணவனுடன் பிணங்குவதை ஊடல் என்பர்.

இவ்வாறு உமாதேவியார் ஊடல் கொண்டிருந்த வேளை தசக்கிரீவன் பெயர்த்த மலையைத் தன் தோள்மீது வைத்துக் குலுக்கினான். மலை குலுங்கியது. சற்று விலகி இருந்த உமாதேவியார் மலை குலுங்கியதால் மனம் கலங்கி இறைவனைத் தழுவிக்கொண்டார். தசக்கிரீவன் மலையெடுத்த செயல் இறைவனுக்கு உமையவள் ஊடல் தீர்த்து நன்மை செய்தது. உடனே இறைவன் “தேவி! அஞ்சற்க” என்று கூறி ஊன்றிய திருவடியின் பெருவிரலின் நகநுனியை ஊன்றிச் சிறிது அழுத்தினார். கதவிடுக்கில் அகப்பட்ட சுண்டெலிபோல் தசக்கிரீவன் உடல் நெரிந்து தோள் முறிந்து “ஓ” என்று கதறினான். அவன் ஆயிரம் ஆண்டுகள் கதறியழுதான் அதனால் தசக்கிரீவனுக்கு இராவணன் எனப்பெயர் உண்டாயிற்று.

இராவணன் என்ற சொல்லுக்கு

**மனச்சாட்சிக்கு மட்டுமே பயந்து நட.**

ரோதனம் புரிந்தவன் என்று பொருள். பின்னர் தனது தலை ஒன்றை முறித்து வீணைமீட்டி, இசையால் இறைவனைப் பாடினான் இராவணன். இசையால் மகிழ் வுற்ற சிவமூர்த்தி இராவணனை விடுவித்து வாளும், தேரும் வழங்கி அருள்புரிந்தார்.

முருகன் பரமகருணாமூர்த்தி, நிறையக் கற்றவர்க்கே அரசன் பரிசளிப் பான். ஆனால் கொஞ்சம் படித்தவர்க்கும் அருள் புரிவான் முருகன் சில காவியங் களைப் படித்த இளம் புலவர்கள் கவிபாடி னால் அக்கவிகளையும் குமரப்பெருமான் காது குளிரக்கேட்டு மகிழ்ந்து அருள் புரிகி றான். என்னே முருகனின் பெரும் கருணை! இளம் புலவர்கள் முன்னேற்றமடைய அருள் புரியும் முருகப் பெருமானைக் கீழ்வரும் பாடலில் பின்வருமாறு வேண்டு கிறார் அருணகிரிநாதப்பெருமான்.

"இராவணனை வதம் புரிந்த திரு மாலின் மருகரே! கடப்பமலர் மாலையை மார்பில் அணிந்துள்ளவரே! இளம் புலவர்கள் பாடும் கவிகேட்டு அருளும் முருகோனே! சிவனுக்கு உபதேசம் செய்த திருவேரகப்பதியில் அமர்வோனே! மாதர் மயக்கமற அருள் புரிவாயே!"

**பாடல்**

பலகாதல் பெற்றிடவு மொருநாழி கைக்குளொரு
பலனேபெ றப்பரவு கயவாலே
பலபேரை மெச்சிவரு தொழிலேசெ லுத்தியுடல்
பதறாமல் வெட்கமறு வகைகூறி

விலகாத லச்சைதணி மலையாமு லைச்சியர்கள்
வினையேமி குத்தவர்கள் தொழிலாலே
விடமேகொ டுத்துவெகு பொருளேப றித்தருளும்
விலைமாதர் பொய்க்கலவி யினிதாமோ

மலையேயெ டுத்தருளு மொருவாள ரக்கனுடல்
வடமேரெ னத்தரையில் விழவேதான்
வகையாவி டுத்தகணை யுடையாமை கிழ்ச்சிபெறு
மருகாக டப்பமல ரணிமார்பா

சிலகாவி யத்துறைக் ளுணர்வோர்ப டித்ததமிழ்
செவியார வைத்தருளும் முருகோனே
சிவனார் தமக்குரிய வுபதேச வித்தையருள்
திருவேர கத்தில்வரு பெருமாளே

**பொருளுரை**

**பலகாதல் பெற்றிடவும் ஒரு நாழிகைக்குள் ஒரு**
பலனே பெறப் பரவு கயவாலே

பல பேர்களுடைய காதலைப் பெறுவதற்கும் ஒரு நொடிப்பொழுதினுள் ஒரு பலனைப் பெறுவதற்குச் சூழ்ச்சி செய்யும் களவுச் செயலால்,

**பல பேரை மெச்சி வரு தொழிலே செலுத்தி உடல்**
**பதறாமல் வெட்கம் அறுவகை கூறி**

பலபேர்களை மெச்சிப் புகழ்கின்ற தொழிலையே செய்து உடல் பதற்றமுறாமல், வெட்கமில்லாமற் பேசி

**விலகாத லச்சை தணி மல்யா முலைச்சியர்கள்**
**வினையே மிகுத்தவர்கள் தொழிலாலே**

இயற்கையில் நீங்காத நாணம் தணிந்த மலைபோன்ற தனங்களையுடைய பொது மாதர்கள் தீவினையையே அதிகம் புரிந்தவர்கள் மாயத் தொழிலால்

**விடமே கொடுத்து வெகு பொருளே பறித்தருளும்**
**விலைமாதர் பொய்க் கலவி இனிதாமோ**

நஞ்சினை வழங்கி எல்லாப் பொருட்களையும் கவர்கின்ற விலைமாதர்களுடைய பொய்ம்மையான கூடல் இன்பம் இனிதாகுமோ?

**மலையே எடுத்து அருளும் ஒரு வாள் அரக்கன் உடல்**
**வட மேரு எனத் தரையில் விழவேதான்**

திருக்கைலாய மலையைப் பெயர்த்து எடுத்தவனும், ஒப்பற்ற வாளை உடையவனுமாகிய அரக்கன் இராவணனின் உடலானது வடபுறத்திலுள்ள மேருமலையைப் போல நிலத்திலே விழுமாறு!

**வகையா விடுத்த கணை உடையான் மகிழ்ச்சி பெறு**
**மருகா கடப்ப மலர் அணி மார்பா**

தக்கபடியாகச் செலுத்திய கணையை உடையவராகிய இராமபிரானின் மருகனே! கடப்பமலர்களை மார்பில் சூடியுள்ளவரே!

**சில காவியத் துறைகள் உணர்வோர் படித்த தமிழ்**
**செவியார வைத்து அருளும் முருகோனே**

சிலகாவியங்களை மட்டும் படித்து உணர்ந்த புலவர்கள் பாடிய கவிதைகளைக் காது குளிரக்கேட்டு அருள் புரியும் முருகப் பெருமானே!

**சிவனார் தமக்கு உரிய உபதேச வித்தை அருள்**
**திருவேரகத்தில் வரு பெருமாளே**

சிவபெருமானுக்கு உரியதாகிய "ஓம்" எனும் பிரணவ மந்திரத்தை உபதேசித்தருளிய திருவேரகப் பதியில் எழுந்தருளியிருக்கும் பெருமையில் மிக்கவரே!

(தொடரும்...

**பெருமை எதனால்?**

அடியார்களின் பெருமையை அளவிட முடியாது. இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் இவைகளெல்லாம் அளவில் பெரியவை. அவைகளுக்கெல்லாம் பெரியபுராணம் என்று பெயர் வரவில்லை. சுமார் நாலாயிரம் பாடல்களே அடங்கிய திருத்தொண்டர் புராணத்துக்குத்தான் பெரியபுராணம் எனப்பெயர் ஏன்? அடியார்களின்

**ஒருவரை ஒருவர் சரியாக அறிந்து கொள்ளுங்கள்.**



உ

# சண்டேஸ்வரர்

நா. சுந்திரலீலா அவர்கள்.

சோழ நாட்டின் மண்ணியாற்றின் தென்கரையில் அழகேயுருவான திருச்சேய்ஞலூர் சகல வளங்களுடன் திகழ்ந்தது. அவ்வூரில் மறையோதும் அந்தணர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்களில் எச்சதத்தன் என்னும் அந்தணனும், அவரது மனைவி பவித்திரையும் இல்லறத்தை நல்லறமாக்கி இனிதே வாழ்ந்து வந்தனர். இருவரும் செய்த தவப்பயனால் ஒரு அழகிய ஆண் மகவு பிறந்தது. குல வழக்கப்படி உபநயனம் செய்வித்தனர். தகுந்த ஆசானிடம் கல்வி கற்பதற்கு அனுப்பி இருந்தனர். எனினும் அக்குழந்தையின் பூர்வபுண்ணியப் பலனால் வேத, ஆகமங்களின் பொருளைத் தானாகவே அறிந்திருந்தது. ஆசான் கற்பிக்கும் அனைத்தையுமே அறிந்து வைத்தபடியால், அவர் கேட்கும் வினாக்களுக்கு மிகவும் சாதுர்யமாகவும், சுருக்கமாகவும் விடையளித்தார். அக்குழந்தை தான் விசாரசருமர்.

ஒருநாள் மாணவர்கள் எல்லோரும் ஊருக்கு வெளியேயுள்ள புல்வெளிக்குச் சென்றபோது பசுக்கூட்டம் ஒன்று காணப்பட்டது. பசுக்களை மேய்க்கும் இடையனைப் பசுஒன்று கொம்பினால் முட்டியது கோபமடைந்த இடையன் அப்பசுவைக் கழியால் அடித்தான். அதைக் கண்ட விசாரசருமர் துடிதுடித்துப் பதைத்துப் போய் இடையனது கையைப் பிடித்து அடிப்பதைத் தடுத்தார். "பசுவை அடிக்காதே இறைவனுக்குச் சமானமானது முக்கோடி தேவர்களும் பசுவில் வாசம் செய்கிறார்கள். சிவபெருமான் பசுவையே தன் வாகனமாக்கியுள்ளார். "பசுவின் சாணத்திலிருந்தே நாம் பூசும் விபூதி கிடைக்கிறது எனப்பசுவின் பெருமைகளை விசாரசருமர் எடுத்தியம்பினார். பசுவின் மடியில் உள்ள முழுப்பாலையும் நாம் கறவாது அதன் கன்றுக்கும் வேண்டும். அதற்குத் தேவையான ஆகாரம், புல், வைக்கோல், தவிடு பிண்ணாக்கு ஆகியன குறைவற வழங்கிக், குடிப்பதற்கு நீரும் தர்வேண்டும். இடையனே இப்பசுக் கூட்டத்தை மேய்க்கும் பணியை இறைவன் பணித்திருக்கின்றான். நான் அதைச் செவ்வனே செய்வேன் எனக்கூறி அந்தணர்க்கேயுரித்தான குடுமி, மார்பில் முப்புரிநூலுடன் எளிய ஆடை புனைந்து பசுக்களை அன்பால் மேய்த்தார். அவரது அன்பால் ஈர்க்கப்பட்ட பசுக்கள் அருகே வந்து நின்றன அவற்றின் மடியில் பால் சுரந்தது.

மண்ணியாற்றங்கரையில் மணலால் சிவலிங்கம் அமைத்து பூக்களைப் பறித்துப் பூசை செய்தார். பசுக்களின் பாலைக் கறந்து சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வந்தார். இதைப் பார்த்த வேறு மாணவன் மற்றை அந்தணர்களிடம் முறையிட அவர்கள் தந்தையான எச்சதத்தனிடம் முறையிட்டனர். தந்தை மகனைக் கண்டிப்பதாக, கூறி அவர் ஆநிரை மேய்க்கும் பொழுது பின் தொடர்ந்து மரத்தில் ஏறிப் பார்த்தார். விசாரசருமர் பாலை அபிஷேகம் செய்து விட்டுத் தவத்திலிருந்தார். தடியால் மகனை அடித்தும் அவர் தவம் கலையவில்லை. குடிக்கின்ற பாலை வீணடிக்

**பணம் வரும்முன் செலவுகளை உண்டாக்காதே.**

கிறாயா? என்று கூறிக் காலால் பாற்பானையை உதைத்தார். பாற்பானை உடைந்தது. கண்விழித்த விசாரசருமர் கடும் கோபமடைந்து பக்கத்திலிருந்த கோலை எடுத்தார். அது மழுவாக மாறியது. உதைத்த காலைத் துண்டித்தார். அலறியபடி கீழே விழுந்து இறந்தான் எச்சதத்தன். விசாரசருமரின் சிவபக்தியை மெச்சிய ஈசன் உமாதேவியோடு இடபவாகனத்திற் காட்சியளித்து. என் மீதுள்ள பக்தியினால் தந்தையின் காலையே துண்டித்தாய். இனி யாமே உனக்குத் தந்தையாவோம் என்றருளினார். சிவாலயங்களில் பக்தர்களால் இறுதியில் வணங்கப் பெறுகிறார். மேலும் சிவபெருமான் தனக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிவேதனங்களையும், உடைகளையும் அவருக்கேயளித்து தலையில் புனைந்திருந்த கொன்றை மாலையையும் சண்டேஸ்வரரின் தலையில் சூட்டி, தொண்டர்களுக்கு எல்லாம் தலைவர் என்ற பதவியும் அளித்துச் சிறப்பித்ததைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு பாடுகின்றார்.

அண்டர் பிரானும் தொண்டர் தமக்க
திபனாக்கி அனைத்து நாம்
உண்ட கலமு முடுப்பனவும் சூடுவ
னவும் உனக் காகச்
சண்டீசனுமாம் பதந் தந்தோமென்
றங் கவர் போற்றிட
முடிக்குத் துண்ட மதிசேர் கொன்றை
மாலை வாங்கிச்
சூட்டினான் சிவபெருமான்.

இதே நிகழ்வைத் திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் பின்வருமாறு பாடி எம் அகக் கண்முன்பு கொண்டு வந்து நிறுத்துகிறார்.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்
கண்டத் தொடு முடனே
பூதலத் தோறும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நா..ம
மும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஆலயத்தில் மற்றை மூர்த்தங்களை வழிபட்ட பின்பு இறுதியாக சண்டேசுவரரை வணங்க வேண்டும். அவர் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதால் அதைக் குழப்பாது எம்மிரு கைகளாலும் மிகவும் மெதுவாக மும்முறை தட்டி வழிபாட்டைப் பூர்த்தி செய்யவேண்டும். சில அன்பர்கள் இது தெரியாது பலமாகத் தட்டுவார்கள். இது தவறானது. நாமும் அன்னாரது பாதார விந்தங்களைச் சேவித்து நல்லருள் பெறுவோமாக.

**மற்றவர்ரை மகிழ்வித்தால் நீ மகிழ்ச்சியடைவாய்.**

உ

தொடர்ச்சி...

# வாழ்க்கையில் சைவமும் அதன் மேன்மையும்

திருமதி கு. கலாநந்தினி அவர்கள்.

குருகுலக்கல்வி முறையினால் பண்பாடு பேணப்படுகிறது. ஒழுக்கம் வரையறை செய்யப்படுகிறது. இதுவே பிரமச்சரிய நிலை, அடுத்து இல்லறம். பொருள் தேடுதல் நாடும் வீடும் வளம் பெறக் கடமைபுரிதல், இனிய இல்லறப் பண்புகளாகிய விருந்தோம்பல், அறப்பணிகள் புரிதல் என்பவற்றை முறையாகச் செய்து முடித்துப் பக்குவநிலையடையும் ஒருவனுக்கு சந்நியாச மனோபாவம் இயற்கையாகவே அமைகிறது. கல்வியின் அடித்தளம் பலமாக இருந்தால் அவன் கற்பவைகற்றபின் அதற்கமைய ஒழுகும் போது சந்நியாசம் இயல்பாகவே அவனுக்கு வாய்த்து விடுகிறது. ஏனெனில் கல்வியின் பயனே அதுவாக இருப்பதனால் அவன் எளிதில் துறவற மனோநிலை பெற்று வானப்பிரஸ்த வாழ்வை மேற்கொள்கிறான். இதனால் மனிதவாழ்வின் நோக்கம் நிறைவேறிப் பூரண நிலையை அடையமுடிகிறது.

இத்தகைய மானுடவாழ்வின் போது சைவசமயம் காட்டும் சிறப்புப் பண்புகளை ஆராய்வோம். அன்புடைமை எனும் பெரும்பண்புடைமை முதன்மையானதாகக் கருதப்படுவதனை நாம் உணரக்கூடியதாக உள்ளது. ஒன்றாய், உடனாய், வேறாய் எங்கும் நிறைந்து விளங்கும் பரம்பொருள் அனைத்து ஜீவன்களிடமும் நிறைந்து விளங்குகிறார். உலகின் அனைத்துப் படைப்புக்களும் இறையின் வடிவமே. அனைத்தும் இறைவனின் சொரூபமெனின் அனைத்து உயிரினங்களையும் இறைவனாகப் பாவித்து அன்பு செலுத்துதல் வேண்டும் என்பது நியதியாகிறது. அன்பு என்பது எல்லைகள் எல்லாவற்றையும் கடந்து விரிவடைய வல்லது. இறைவனின் கருணைக்கு எல்லையே இல்லையெனும் வகையில் எளியராய் வந்து பன்றிக்குட்டிகளுக்குப் பாலமுது ஊட்டினார். அன்புக்கு அடிமையாகிய இறைபரம் பொருள் கண்ணப்பரின் நிவேதனத்தையும் ஏற்றுக் கொண்டு அவரை ஆட்கொண்டார். வந்தியின் எளிய பக்திநிலைக்கருளியவராய்க் கூலியாளராக வந்து மன்னனின் பிரம்படியையும் ஏற்றுக் கொண்டார் அல்லவா? அன்புக்கு அடிமையாகிய வள்ளல் முருகன் குறமகள் வள்ளியையும் ஏற்றுமணம் கொண்டார். இறைவன் அன்பின் இருப்பிடம், அன்புமயமானவன் என்பதனை உணர்த்த எத்தனை திருவிளையாடல்கள் உள்ளன. பெரியபுராணத்தையும் கந்தபுராணத்தையும் படிக்குந்தோறும் கேட்குந்தோறும் நாமும் அன்புவயப்பட்டவராய் மாறுகிறோம். அன்புமயமானவன் இறைவன். அன்பே இறைவன் என்பதனை "அன்பே சிவம்" என்று திருமூலர் கூறியமை சிந்திக்கத்தக்கது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்

**இனிய சொற்கள் வலிமை நெஞ்சை உருகவைக்கும்.**

அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

உண்மை அறிவற்றோர் அன்பு வேறு சிவம்வேறு என்பர். மெய்யறிவுடையோர் அன்பே சிவம் என்று கொண்டு அன்புடையராய் வாழ்வர் எனும்போது அன்புக்கு வேறு வரைவிலக்கணம் வேண்டுமா? அன்புடைமை பெரிதும் போற்றப்படுவதனாற்றான் சைவவாழ்வு என்பதற்குப் பெரிதும் மதிப்பு ஏற்படுகிறது. அன்புடைமை வாழ்விற்கு அத்தியாவசியமான கருவூலம் என்பதனால் அதனைப் பகிர்ந்து கொள்பவருக்குப் பெருமை ஏற்படுகிறது. அன்பு என்பது கொடுக்கப்படும் போது வளரும் தன்மையுடையது. பொருட்செல்வம் கொடுத்தால் குறைவுபடும். அன்புச் செல்வம் கொடுத்தால் பெருகுமேயன்றிக் குறைவுபடாது. அன்புடைமையினாற் சுய நலம் குறைகிறது. பொதுநலம் கருதும் மனப்பாங்கு வளர்கிறது. இதனாற்றான் "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று வள்ளுவர் விதந்து கூறியுள்ளார்.

அன்புடைமை வளர வளர அருளுடைமை உண்டாகிறது அருளுடையார்க்கு அவ்வுலகம் எளிதாகிறது. அன்பின் அடிப்படையில் விளையும் அருளானது சமூகம், நாடு எனப்பரந்து விரிந்து செல்லும்போது பேதங்கள் மறைந்து ஒற்றுமை மலர்கிறது. இதனால் ஊரும் நாடும் செழிக்கின்றன. இத்தகைய மேலான அன்புடைமையை மையப்பொருளாகக் கொண்டு மிளிரும் சைவசமயம் எத்தனை மேன்மையான சமயமென்று இயம்பவும் வேண்டுமா?

அடுத்துச் சைவம் காட்டும் அரிய பண்பு யாது என நோக்குவோமாயின் ஒழுக்கப்பண்பை அது வலியுறுத்தி நிற்கிறது.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்று ஒழுக்கத்திற்கு விளக்கம் சொல்கிறார் வள்ளுவர்.

உண்மை, நேர்மை, வாய்மை எனும் தன்மைகளே ஒழுக்கத்தின் நிலைகளாகும் ஒழுக்கத்தில் உயர்ந்தோரைச் சான்றோர் எனப் போற்றும் முறைமையும் எம்மிடையே உள்ள நிலையாகும். ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கொள்ளவேண்டும் என்பதனை மிகத் தெளிவாக்க, "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்றார் வள்ளுவனார். உயிரின் மகத்துவம் மேலானது. உயிர் இருக்கும் வரைதான் வாழ்வு ஆகின்றது. அழகிய இப்பூவுலகிலான இயற்கை இன்பநுகர்வும் பொன், பொருள் முதலியவற்றால் அமையப்பெறும் சுகபோக நுகர்வும் எம்மைப் படைத்த அப்பரம் பொருளை அறியும் அறிவும் எமக்கு ஆகின்றன.

உயிரற்ற ஒருவரால் என்ன செய்யமுடியும். உயிர் இருந்தாற்றான் உண்ணலாம் உறங்கலாம், கற்கலாம் பேர்புகழ் பெறலாம், செல்வம் சம்பாதிக்கலாம், இன்பசுகங்களை அநுபவிக்கலாம் உயிரற்ற உடலுக்கு இவையெல்லாம் தேவையே இல்லை. இந்த உயிருக்குத் தான் இவையனைத்தும் தேவைப்

**செல்வங்களைவிட செல்வாக்கு மேலானது.**

படுகின்றன. இத்தகைய மேன்மையான உயிர் இறைபரம்பொருளின் ஒப்பற்ற கருணையின் வெளிப்பாடாக எமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த மேலான உயிர் எமக்குக் கிடைத்திருப்பதற்கு நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும். அதுவுமன்றி இந்த அரியதான உயிரை ஒன்பது துவாரங்கள் உள்ள உடலின் தங்க வைத்துள்ளான் எனும்போது அது அற்புதத்திலும் அற்புதமல்லவா? இத்தகைய அற்புதமான இறைவனின் கருணையின் வடிவாகிய அளப்பரும் கொடையாக எமக்குக் கிடைத்திருக்கும் உயிரிலும் மேலானது ஒழுக்கம் எனும்போது ஒழுக்கத்தின் மேன்மையை எவ்வாறு இயம்புவது? இத்தகைய ஒழுக்கத்தை நாம் பேணிப் பாதுகாப்பதற்கு எமக்கு உதவுவது எமது சமயசிந்தனைகளே. சைவத்தின் போதனைகள் ஒழுக்கத்தை முன்வைத்தே எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

வாய்மைகாத்த தசரதமன்னனும், சத்தியம் காத்த அரிச்சந்திரனும், சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட தருமரும், எமது சமயம் போற்றும் கதாநாயகர்கள். ஒழுக்கத்தின் மேன்மையால் சிறப்புப் பெறும் சீதாபிராட்டியும் கற்புக்கரசி கண்ணகியும், நட்சத்திரப் பேறுபெற்ற அருந்ததியும் நாம் வணங்கும் தெய்வங்களாக உள்ளனர் எனும் போது ஒழுக்கத்தின் சிறப்பை எவ்வாறு இனிப்பகரமுடியும். சைவசமயம் காட்டும் பண்புகள் அனந்தம். அறத்தைப் போற்றுகிறது. வீரத்தை விளக்குகிறது. அறத்தின் நாயகர்களாய் ஸ்ரீராமனும் தருமரும், வீரத்தின் திருவுருவாய் அர்ச்சுனனும் பீமனும், பரதசத்துருக்கரும் மிளிர்கின்றனர். இதிகாசங்கள் கதைவடிவில் அறத்தின் மேன்மையை எடுத்துக் கூறுகின்றன. எனினும் அறத்தின் தன்மையைச் சமயம் விளம்பும் தன்மை நுட்பமானது.

"அறம் செய்யவிரும்பு" என்று எமது நீதி நூல்களில் கூறப்பட்டிருக்கும் சிறிய வசனத்தின் உள்ளடங்கி இருப்பது மிகப்பெரிய தத்துவம். அறம்செய்ய விரும்பு எனும்போது அங்கே எமது மனோநிலை மிகவும் முக்கியமானதாகிறது. "அறம் செய்" என்று கட்டளையிடாது "அறம் செய்யவிரும்பு" என்று விரும்பு என்பதனைச் சேர்க்கும் போது அது எமது மனோநிலையையே சுட்டி நிற்கிறது. பிறர் தான தருமங்களைச் செய்வதனைப் பார்த்துத் தானம் செய்தல் சிறந்தது எனினும் இயல்பாக எமது உள்ளம் உந்திச் செய்யும் அறச்செயல்கள் மேன்மையானவை. இதனை இன்னும் ஆராய்வோமானால், பெரும்நிதி படைத்தவன் தம்மிடம் உள்ள பணத்தில் சிறிதளவில் தானதர்மக் காரியங்களுக்குப் பயன்படுத்துகிறான். அதே வேளை கொள்ளை இலாபம் வைத்தோ வஞ்சனையாகவோ! பெரும்நிதியை மக்கள் மூலமாகப் பெற்றுப்பெரும் செல்வந்தனாக விளங்குகிறான். இவன் செய்யும் தர்மம் பலனளிக்குமா? இல்லவே இல்லை. வஞ்சனையும் ஏமாற்றும் செய்யும் ஒருவனிடம் அறம் கிடையாது. இயல்பாக இரங்கும் தன்மைகிடையாது. புண்ணியம் சேர்ப்போம் என்ற நோக்கில் அவன் தர்மம் செய்கிறான். இதனாற்றான் "அறம்செய்ய விரும்பு" என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு எத்தனை எத்தனை அற்புதமான இயல்பு விளக்கங்களை எல்லாம் சைவம் எடுத்துக் கூறுகிறது. புராண இதிகாசங்கள் மூலம் எமக்கு வாழ்க்கையை மேன்மைப்படுத்தும் வழிமுறைகளை வகுத்து எம்மை வையத்துள்

**துயரத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்.**

வாழ்வாங்கு வாழ வழிசெய்கிறது. இவ்வாறு மேன்மை மிக்க சைவசமயத்தவராய் நாம் பிறப்பதற்கு என்ன புண்ணியம் செய்தோம் என்று வியந்து மகிழ்ந்து கறபவற்றைக் கற்று, அதற்குத் தக்கபடி ஒழுகி எம்வாழ்வைச் செம்மைசெய்வோமாக. (முற்றும்)

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்."

## அருணகிரிநாத சுவாமிவிழா 2006

வருடா வருடம் யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக்கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அருணகிரிநாத சுவாமிகள் குருபூசை 10.07.2006 திங்கட்கிழமை வழமைபோல் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் மிகவும் சிறப்பானமுறையில் நடைபெற்றன. விழாவின் ஆரம்பமாக அருணகிரிநாத சுவாமிகளின் உருவப்படத்திற்கு தீபாராதனை இடம்பெற்று பஞ்சபுராணம் பண்ணுடன் ஓதப்பட்டு விழா ஆரம்பமாகியது.

விழாவிற்கு தலைமை வகித்த நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் இவ்விழா வருடாவருடம் நடைபெற்றுவருவதையும் கூறி அருணகிரிநாத சுவாமிகளால் அருளப்பட்ட திருப்புகழின் பெருமைகளையும் அதன் சொற்றொடர்களின் ஆழமான கருத்துக்களையும் கூறியதோடு, பொருளுணர்ந்து படித்தோமானால் முருகனருள் கிட்டும் என்பதை விழாவிற்கு வருகைபுரிந்த அடியார்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

சிறப்புரைகள் ஆற்றுவதற்கு வருகை புரிந்திருந்த பிரம்மஸ்ரீ காரை. கு. சிவராஜசர்மா அவர்களும், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களும் ஆச்சிரம மண்டபத்தில் இவ்விழா வருடாவருடம் நடைபெறுவதையும் விழாவில் தாங்கள் தவறாது கலந்துகொள்வதைப் பற்றியும் கூறியதோடு அருணகிரிநாத சுவாமிகளின் வரலாற்றினை பல கோணங்களில் விழாவிற்கு வருகைபுரிந்த அடியார்களின் இரசனைக்கேற்றவாறு கூறினார்கள். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவிகளின் திருப்புகழ் இசை பக்கவாத்தியசகிதம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப்பணிகளின் ஒரு அங்கமாக பாடசாலை மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை புதிய விஞ்ஞானக்கல்வி நிலையத்தின் நிர்வாகி திரு R. அருள்செல்வம் அவர்கள் கையளித்தார்கள். இறுதிநிகழ்வாக விழாவிற்கு சகல வகைகளிலும் உதவிபுரிந்த கரணவாயைச் சேர்ந்த ம. கதிரிப்பிள்ளை உட்பட அனைவருக்கும் நன்றி கூறும் நிகழ்வுடன் விழா முற்றுப்பெற்றது.

**எப்படியாவது சில நேரம் தனிமையில் இருந்துபார்.**

உ

# ஈழத்துச் சிவாலயங்கள் என்னும் நூல் வாழ்முதல்வதியும் திருக்கோவில்களை விளக்குவன

**திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்.**

சிந்தனைக்குரியது சிவபரம் பொருள். உலகின் உள்ளும் புறம்பும் அப்பாலுமாக - ஒன்றாய் உடனாய் வேறாய் நின்று என்றும் நன்றே செய்வது அச்சிவபரஞ்சுடர். அது ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதி. அச்சோதியினுள்ளே அண்ட சராசரங்கள் அனைத்தினுடைய தோற்றமும் ஒடுக்கமும் நிகழ்வது.

பண்டும் இன்றும் என்றும் உள்ள பரம்பொருளுக்குச் செய்யும் நன்றி மறவாமையால் உருப்பெறுவன சிவாலயங்கள். சிவாலயங்கள் இல்லாத ஊர் திருவில்லாத ஊர் என்பது அப்பர் அடிகளுடைய அருள்மொழி. அப்பொருளைச் சற்று விளக்கிக் 'கோயில் இல்லாதவூரிற் குடியிருக்கவேண்டாம்' என்பது ஆன்றோர் வாக்கு.

அதனால், தேசங்களிலும் பட்டினங்களிலும் ஊர்களிலும் ஆலயங்கள் அமைவன - அமைக்கப்படுவன.

சிவாலயம் அமைக்கும் சிவபுண்ணியத்திற்கு மேலானதாகவோ சமானமானதானவோ சிவபுண்ணியம் பிறிது ஒன்றில்லை.

கோச்செங்கட் சோழமன்னர் "சந்திரசே கரனமருந் தானங்கள் பலசமைத்தார்" என்பது பெரியபுராணம்.

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு
ஏழின்மாட மெழுபதுசெய் துலகமாண்ட"
சோழன் என நாலாயிரம் நன்கு பாடும். (1505)

இனி, சிவனுறையும் கோயில், பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில் இளங் கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில், சிவன்கோயில் என்று சிவாலய விரிவுகளை ஆறாம் திருமுறை அறியத்தரும்.

ஈழமணித் திருநாடும் ஏதோ.. சிவ புண்ணியப் பேற்றால் காலங்கடந்த சிவ வழிபாட்டுப் பூமியாகப் பொலிவு பெற்று விளங்குகின்றது. இராவணன், மண்டோதரி, மயன் போன்றவர்கள் சிவவழிபாட்டால் சிவன் அருள் பெற்றுத் திளைத்தமைக்கு ஆங்காங்கு அடிச்சுவடுகள் உண்டு.

திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம் ஈழநாட்டின் இருகண் போன்று, திருமுறைப்பாடல் பெற்ற திருத்தலங்கள்.

மேன்மைகொள் சைவநீதியை உலகமெல்லாம் விளங்கச் செய்யும் சிவனுறையும் கோவில்கள் மரபுவழித் தொடர்பாக வந்த வண்ணம் உள்ளன.

காலவரையறை கடந்த எத்தனையோ சிவாலயங்கள் மண்மாதாவின் வயிற்றினிடமாகவும் கடலரசன் மடித்தலத்திலும் உறங்கிய வண்ணம் இருப்பது உலகறிந்த உண்மை.

அவை ஒருபுறமிருக்க இன்று

**விருப்பம் நிறைவேறாத போதுதான் குணம் வெளிப்படும்.**

ஈழநாட்டின் எல்லா மாவட்டங்களிலும் சிவாலயவழிபாடு நிகழ்ந்து வருவது கண் கூடு.

ஈழத்துச் சிவாலயங்கள் என்னும் நூலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐம்பது சிவன் கோவில்கள் பற்றிய வரலாறும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பதின்மூன்று சிவாலயங் களின் தொகுப்பும், புத்தள மாவட்டத்தில் ஒரு சிவன் கோவிலும், திருக்கோணமலை மாவட்டத்தில் ஆறு சிவன் ஆலய ஆய் வும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு சிவாலயங்கள் பற்றிய குறிப்புக்களும், நுவரெலியா மாவட்டத்தில் ஒன்பது சிவால யங்கள் பற்றியும் இடம்பெற்றுள்ளன.

நூலில் இடம்பெறாதிருக்கும் சிவன் கோவில் பூர்வோத்திரம் பலவா னாலும் அச்செய்திகள் அடங்கிய தொகுப்பு நூல் வெளிவருவதற்கு இந்த 'ஈழத்துச் சிவாலயங்கள்' என்னும் நூல் ஒரு முன்மாதிரி எனலாம்.

நாம் வழிபாடு செய்யும் சிவாலயங் கள் தோன்றி வேரூன்றி, வளர்ந்த வர லாற்றை உள்நோக்கம் செய்வதற்கு கோயில்களுடைய பூர்வீகத்தை அறிவ தற்கு ஒரு நல்ல நூல் ஈழத்துச் சிவால யங்கள்.

ஈழத்துச் சிவாலயங்கள் என்னும் நூலில் கிட்டத்தட்ட ஈழத்திலுள்ள சிவா லயங்களுள் எண்பது சிவாலயங்களு டைய வரலாற்று உண்மைகள் தொகுக் கப்பட்டுள்ளன.

நூலாசிரியராக விளங்குபவர் அருள்மொழியரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்.

வெளியிடுவோர்- திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தினசுவாமிகள் தொண்டர்சபை.

பதிப்பாசிரியர்- தம்பு துரைராசா அவர்கள். முகவுரை, ஆசிச்செய்தி, வாழ்த் துச் செய்தி, மதிப்புரை, அணிந்துரை, வெளியீட்டுரை, வாழ்த்துரை யாவும், நூலைச் சிறப்பிப்பதோடு, ஒருதரம் படித் துப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன. ஆல யம் பற்றிய நிழற்படங்கள் நூலுக்கு மெருகூட்டுவன.

இலங்கையில் இந்நூலின் பெறு மதி முந்நூற்றைம்பது ரூபா மட்டும்.

யாழ்ப்பாணத்தில் இந்நூலை, வைத்தியசாலை வீதியில் 819/1 இலக்க இல்லத்தில் திரு. ஆர்.வி. கந்தசாமி J.P அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று வெளியீட்டாளர்கள் அறியத் தருகின்றார் கள்.

'ஈழத்துச் சிவாலயங்கள்' என்னும் நூல் பொன்னே போற் போற்றத்தக்கது. அழகியநூல், அரியநூல். பெரிய பொருள் பொதிந்த நூல், கைக்கு அடக்கமானது. காத்திரமிக்கது. கனமானது. அழகிய முகப்புப் படம் நூலை அலங்கரிக்கிறது. இல்லங்கள் தோறும் இருக்க வேண்டியது. பரிசுப்பொருளாகப் பிறர்க்கு உதவும் பெருமை மிக்கது ஈழத்துச் சிவாலயங்கள் என்னும் ஏடு.

சைவம் தழைக்க - சிவம் வாழ்க!

**நம்மை உயர்த்துவது செயலன்று ஆர்வமே.**



உ

(தொடர்ச்சி...

# திருவாசகம்

**திரு கு. கனகரத்தினம் அவர்கள்.**

இப்பாட்டில் கவிமணி அவர்களுக் குத் தேவாரம் சர்க்கரைப் பாகாகவும் திருவாசகம் தேனாகவும் தித்திப்பதை அறிகிறோம். பாகையும் தேனையும் நாவி னாற் சுவைப்பது போலத் தேவாரமாகிய பாகையும் திருவாசகமாகிய தேனையும் நாவாரத் தன்மகன் பாடவேண்டும் என்று எண்ணுவது தேவார திருவாசகத்தில் தாய்கொண்டுள்ள பற்றையும் எடுத்துக் காட்டுகிறது. தேன் உண்பவர் உடற் பிணிக்கு மருந்தாகும். திருவாசகத் தேன் பிறவிப் பிணிக்கு மருந்தாகும். மேலும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாசகம் பற்றிக் கொண்டுள்ள கருத்தினைப் பார்ப்போம்.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடைமுக்கட்
காரணன் உரையெனும் ஆரணமொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூரண்ணல்
மலர் வாய்ப்பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்.
திருவாசகம் இங்கொருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடு மணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம் மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

-நால்வர்நான்மணிமாலை-

இப்பாடலில் ஆதிநூலாகிய வேதத்தையும் திருவாசகத்தையும் ஒப்ப நோக்குவதைப் பார்க்கின்றோம். முக்கண் ணுடைய முதல்வன் வாய்மொழியென்னும் வடமொழி வேதவாக்கோ? வாதவூரண்ணல் மலர் வாய்ப் பிறந்ததமிழ் திருவாசகமோ? இவற்றில் எது சிறந்தது என்று சொல்லு வீர்? வேதவாசகம் ஓதுவார் கண்களில் நீர் பெருகிமனம் நெகிழ்ந்து உருகுவதைக் கண்டிலோம் திருவாசகம் ஓதுவார் மனங் கரைந்து கண்களில் நீர்பெருக, மெய்ம் மயிர் சிலிர்ப்ப விதிர் விதிர்த்து அன்பரா வதைப் பார்க்கின்றோம். ஆகையால் திருவாசகமே சிறந்தது என்பது புலனாகின் றது.

'கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள், தொடுமணற்கேணியிற் சுரந்து நீர்பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி அன்பர் ஆகுநர் என்னும் தொடர் திருவாசகத்துக்கு ஓதுவாரை உருகவைக் கும் பண்புமிகுதியும் உண்டு என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. அதோடு தமிழர்

**தவறு செய்துவிட்டு மன்னிப்புக் கேட்பவன் கோழை.**

களாகிய நமக்குத் தமிழ்மொழியே வழி பாட்டுக்கு ஏற்றது என்பதையும் காட்டு கிறது.

திருவாசகம் தூய அன்பின் வெளிப்பாடாகும் அதன் மாண்பினை இறை அருளால்தான் உணரமுடியும். ஒருசில பாடல்களைப் படிப்போம் பொருள் உணர்வோம். இறைவனின் தொன்மைக் கோலத்தை நோக்குவோம் மனம் மிக மகிழ்வோம் மனக்கண்முன் கொண்டு வருவோம்.

"தோலும் துகிலுங் குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமேநோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

இக்கோலம் சிந்திப்பார் உள்ளங்களைக் குளிரவைக்கிறது. மாதொருகூறனாம் இறைவன் காட்சியை உள்ளத்தில் எழுதிக்காட்டுகிறது.

'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'

என்னும் திருவருட்பயன் ஆசிரியர் உமாபதிசிவனார் பாடலின் பொருளின் விளக்கமாகவும் பாடல் அமைவதைப் பார்க்கின்றோம்.

இக்கோலத்தில் வலப்பாகம் ஆண் உருவாகவும் அதில் ஆணுக்குரியதோல் குழை, வெள்ளைநீறு, சூலம் என்பன காணப்படுகின்றன. இடப்பாகத்தில் பெண் ணுக்குரிய, துகில், தோடுசாந்து, வளை, பசுங்கிளி என்பன காணப்படுகின்றன.

உலகநாயகனாகிய இறைவனை விண்ணிழிந்து மண்ணிறங்கி மதுரையில் மண்சுமக்கவும், திருமேனி புண்சுமக்கவும் வைத்தது திருவாசகம். பாடலைப்பாடி இன்புறுவோம்.

'பண்சுமந்த பாடற் பரிசுபடைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்தகீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்'

இப்பாடல் பெருந்துறையில் எழுந் தருளிய பெருமான் பெண்ணை ஒரு பாகத்து உடையவன், நெற்றிக்கண்ணை உடையவன் பொன்மேனியுடையவன் என அவன் திருமேனிப் பொலிவைக்காட்டுவ தோடு, தேவர்களும் புகழும்படியான புகழுடன் மண்ணுலகத்தின் தலைவனும் ஆகிய பெருமையை உடையவன் இசைப் பாடல்கள் பாடுவோர்க்குப் பரிசாக இம்மை, மறுமை, வீட்டின்பங்களை அருள்பவன். தன் அடியார்க்கு அடியனாய்ப் பிட்டினைக் கூலியாகக் கொண்டு மண்சுமந்தும், அரசன் கைப்பிரம்பால் அடிவாங்கிப் பொன் மேனி புண்பட்டும் திருவிளையாடல் புரிந்த வன் என அவன் சீர்பரவுகிறது.

'அளப்பில கீதம் சொன்னார்க்கு

**ஆபத்திலே சிநேகிதனை அறி.**

அடிகள் தாம் அருளுமாறே' எனத் திருநாவுக்கரசரும் ஈசன் தன்மேல் அளவற்ற இசைப்பாடல்களைப் பாடுவோர்க்குத் தன் திருவடிகளைக் கொடுப்பான் என ஈசன் பரிசுகொடுக்கும் முறைமையினை உறுதிப்படுத்துகிறார். இறைவன் "தாயிற்சிறந்த தயவான தத்துவன்" என்பதை விளக்குகிறார் பின்வரும் பாடலினைப் பாடி அன்பினைப் பெருக்குவோம்.

பால் நினைந்தூட்டும் தாயினும்சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

உலகியல் தாய்மார்கள் எல்லோரும் ஒரேஇயல்பினர் அல்லர். தரவேறுபாடுடையவர்கள். அவர்களில் குழந்தையின் பசியினை நினைந்தூட்டும் தாயே மேலானவள். அவளினும் மிகுதியான பரிவுடையவன் இறைவன் அவன் காட்டும் பேரன்பு உடம்பினை உருக்கும், உள்ளத்தில் ஞானத்தைப் பெருக்கும் அழியாத இன்பமாகிய தேனைப்பொழியும்.

இறைவன் காட்டிய பேரன்பினால், உடல் உருகி, உள்ளத்தில் ஞானம் பெருகி அழியாத இன்பத்தைப்பெற்ற மணிவாசகர், இறைவனை முன்னிலைப்படுத்தி, அருட்செல்வமே! சிவபிரானே! நான் உன்னைத் தொடர்ந்து உறுதியாகப் பற்றியுள்ளேன் என் பிடியிலிருந்து நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது? எனக் கேட்பது என்னைவிட்டுப் போகாது என்னுடன் இரு எனக் குழந்தை தாயைக்கேட்பது போலல்லவா இருக்கிறது. இதில் மிஞ்சிய அன்பின் விளைவை உணருகிறோம்.

அந்தணராய் வந்த சிவபெருமான் திருவாசகத்தை எழுதிமுடித்ததும் மாணிக்கவாசரிடம் 'பாவைபாடிய தங்கள் வாயால் ஒரு கோவைபாடுக' எனக்கேட்டார். இதிலிருந்து திருவெம்பாவைப் பாட்டில் சிவபெருமானுக்கு இருந்த விருப்பம் புலனாகின்றது. பாவைப்பாட்டில் இறுதியில் இருக்கும் பாடல் இறைவன் திருவடி மலரைப் போற்றுகின்றது. இறைவனது திருவடியே எல்லாமாய் இருத்தலை உணர்த்துகின்றது. பாடலைப்பாடி இன்புறுவோம்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்

**நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே.**

போற்றி யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்.

இப்பாடல் இறைவனது ஐந்தொழிலையும் விளங்கக்கூறுகின்றது.

போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் என்பது முதலாக.. போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள் முடிய வுள்ள ஐந்து அடிகளிலும் முறையே உல கத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் களும் கூறப்பட்டிருப்பதைக் காண்கின் றோம் எல்லாவற்றிற்கும் நிலைக்களமாய் விளங்குவது திருவடியாகும். திருவடி என்பது திருவருளைக்குறிக்கும்.

பாடலின் பொழிப்புரையைப் பார்ப் போம். எப்பொருளுக்கும் முதலாயுள்ள உன்திருவடி மலருக்கு வணக்கம் எவற் றுக்கும் முடிவாயுள்ள செந்தளிர்போலும் திருவடிகளுக்கு வணக்கம். எல்லாவுயிர் களும் தோன்றுதற்குக் காரணமாகிய பொன்போன்ற திருவடிகளுக்கு வணக்கம், எல்லா உயிர்களுக்கும் நிலைபெறுதற் குரிய பாதுகாப்பாகிய அழகிய கழல ணிந்த திருவடிகளுக்கு வணக்கம், எல்லா வுயிர்களுக்கும் முடிவு எய்துதற்குக் காரணமாகிய திருவடிகள் இரண்டிற்கும் வணக்கம், திருமாலும் பிரமனும் காண முடியாத திருவடித்தாமரை மலருக்கு வணக்கம், நாம் உய்யும்படி ஆட்கொண் டருளுகின்ற தாமரை மலர்போலும் திருவடிகளுக்கு வணக்கம் என இவ்வாறு கூறிப்போற்றி, இறைவனை வணங்கி முழுகுதற்குரிய மார்கழிநீரில் ஆடுவோம். என்பது பொருளாகும்.

இப்பாடலினால் எப்பொருளின் தோற்றத்துக்கும், நிலைத்தலுக்கும், அழி விற்கும் காரணனாய் இருப்பவன் முழுமுத லாகிய சிவபெருமானே என்பதை அறிகின் றோம். நாதன்தாள் வாழ்க என வாழ்த்து வோம். இவ்வாறு இறைவன் சீர்பலவும் இயம்பும் நூலாக விளங்குகிறது திருவா சகம் பாடிப்பரவுவோர்க்கு அருட்செல் வத்தை வழங்குகின்றது. இதன்வழி நின்று அருளாரமுதத்தை அள்ளிப் பருகவறியாது பாற்கடலில் மீன்போல் அலைகின்றோம் திருவாசகத்தில் நாட்டமில்லாதவர்களாய் வாளாஇருக்கின்றோம்.


இங்கிலாந்து நாட்டவரும் மதம் பரப்பச் சென்றவருமாகிய ஜி. யு போப் பாதிரியாரைத் தமிழும் திருவாசகமும் கவர்ந்தன. திருவாசகத்தைப் படித்து மன முருகினார். உலகமொழியாகிய ஆங்கிலத் தில் மொழி பெயர்த்துக் கொடுத்தார். தன் கல்லறையில் கூட தாம் தமிழ் பயிலும் மாணவன் என்று பொறிப்பித்தார். அவரைப் பின்பற்றி தமிழையும் திருவாசகத்தையும் நேசிப்போம்.

நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்
தேடித்திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்தைக் கோயிலாக்கொள்வீரே.

-திருமூலர். (முற்றும்)

**அன்பாய் இரு ஆனால் அடிமையாய் இராதே.**

உ



# இந்துக்களின் முக்கிய கடமைகளில் ஒன்று மரம் வளர்த்தல்

**திரு ப. அருந்தவம் அவர்கள்.**

உலகில் தோற்றம்பெற்ற மதங்களில் ஆதியுமந்தமும் இல்லாத உன்னத மதமாகக் கணிக்கப்படுவது இந்துமத மாகும். இது இவ்வுலகிலும், மறுமையிலும் மனிதன் அடையவேண்டிய நற்பேறுகளை அடையும் வழிவகைகளை எடுத்தியம்பு வதில் முன்னிற்கும் மதமுமாகும்.

இந்து மதத்தில் தாவரங்களை வளர்த்தல் பற்றிப் பல்வேறு முனிசிரேஷ்டர் களும் ஆராய்ந்து விரிவாகத் தந்துள்ளனர். வேதம், உபநிடதம், இதிகாசம், மனுதர்ம சாஸ்திரம், சாணக்கிய அர்த்தசாஸ்திரம், திருமந்திரம், தேவாரம், அக்கினிபுராணம், பத்மபுராணம், மற்சபுராணம், வராக புராணம், பெரியபுராணம், காமசூத்திரம், விருட்சாயுர்வேதம், சுக்கிரநீதி, காமந்தகீய நீதி, பிருஹத் சம்ஹிதை, திதி தத்துவம் முதலிய நூல்களில் தாவரங்களை வளர்த் தல் பற்றிய செய்திகளைக் காணலாம்.

திருமூலரின் ஆக்கமான திருமந் திரம் கடவுளை வணங்குதல், தருமம் செய்தல், மரம்வளர்த்தல் ஆகியவற்றை மனிதனின் முக்கியமூன்று கடமைகளாக எடுத்தியம்பியுள்ளது. இக்கடமைகளை நிறைவேற்றுதல் தான் பிறவிப்பயன், வீடு பேற்றையடைதற்குத் தாவரங்கள் வளர்த் தல் இன்றியமையாததாகும். என்பதனைப் பின்வரும் திருமந்திரப்பாமூலம் வலியுறுத் தியுள்ளார்.

பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீதலை ஆயினும் ஈயார்
கரத்தால் நீர்அட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நல் நெஞ்சினரே!

(திருமந்திரம் 121)

அதாவது "பரமனைப் பாடிப் புகழாதவர்கள், இரந்தோருக்கு ஈயின் தலை அளவுகூட உபகாரம் செய்யாதவர் கள், கைகளால் நீரை அள்ளிக் காட்டை (தாவரங்களை) வளர்க்காதவர்கள் நரகத் தில் நிற்பார்கள்" எனவும் கூறுகிறார். எனவே இத்திருமூலரின் கருத்துப்படி தாவ ரம் வளர்ப்போர் நரகம் செல்லமாட்டார்கள் என்பது உறுதி.

இதிகாசங்களில் ஒன்றாகப் போற் றப்படும் மகாபாரதத்திலே, போர் முடிந்த பின் ஆட்சிபீடம் ஏறும் தருமபுத்திரருக்குக் கிருஷ்ணர் கூறும் அறிவுரையின் ஓர்பகுதி பின்வருமாறு,

"மரம் வளர்ப்பவன் இவ்வுலகில் புகழையடைகிறான்.
மறு உலகிலும் பல நன்மைகளைப் பெறுகிறான்.

**தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.**

பித்ருக்கள் அவனைக் கொண்டாடுகிறார்கள். ரிஷிகள்,
பித்ருக்கள், தேவர்கள் மற்றும் அதிதிகள் முதலானோருக்குப்
பல உதவிகள் புரிந்தவனாகிறான். மரங்களின் புஷ்பங்களால்
தேவர்களும், பழங்களால் பித்ருக்களும், நிழலால் அதிதிகளும்
திருப்தியடைகின்றனர். தேவர்கள், கந்தர்வர்கள், மனிதர்கள்
கின்னார்கள், ரிஷிகள் முதலானோர் மரங்களில் தங்குகின்றனர்.
மரம் வளர்த்தவர், யாகம் செய்தவன், உண்மைபேசுபவன்
ஆகியோர் அனைவரும் சுவர்க்கம் சென்று அங்கு
தேவர்களாற் கௌரவிக்கப்படுகின்றார்கள்"

எனப் பாரத இதிகாசம் மரம் நாட்டி வளர்ப்பவன் இவ்வுலகில் மட்டுமன்றி மறு உலகிலும் மேன்மைப்படுத்தப்படுவதை எடுத்துக் கூறியுள்ளது. இதேபோல் பாரதத்தின் உட்கூறான பகவத்கீதை

"இப் பிரபஞ்சத்தில் மாசு அகற்றும், மரங்களை வளர்ப்பது
ஓர் யக்ஞம் (வேள்வி)" என்றும் கூறுவது நோக்கற்பாலது.

பெரியபுராணத்தைத் தந்த சேக்கிழார் சரியை நெறிநின்று இறைவனை அடைந்த திருநாவுக்கரசரைப் பற்றிக்கூறும்போது,

"காவளர்த்தும் குளந் தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும் நானிலத்தி லுள்ளோர்
யாவர்க்கும் தவிராத ஈகை வின்னத்துறை நின்றார்"

(திருநாவுக்கரசர் புராணம். 36)

இங்கு தொண்டு நெறியில் நின்ற அப்பரின் முதற்கடமையாகக் குறிப்பிடப்பட்டது. மரம் வளர்ப்பதே என்பது 'காவளர்த்தும்' என்று குறிக்கப்படுவது நோக்கத்தக்க தொன்றாகும்.

பண்டைக் காலத்தில் மூலிகைகள், மரங்கள் ஆகியனபற்றி பலநூல்கள் வடமொழியில் எழுந்துள்ளன. அவற்றுள் சிறப்புமிக்க நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் 'விருட்சாயுர்வேதம்' மரம் வளர்ப்பதன் அவசியம்பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

"மக்களுக்குப் பயன்படும் வகையில் படிக்கிணறு ஒன்று
அமைத்தால் அது சாதாரண கிணறுகள் பத்து அமைத்ததற்குச்
சமன். ஒரு குளம் அமைத்தால் படிக்கிணறு பத்து
அமைத்தற்குச் சமன். இதேபோல் ஓர் நன்மகனைப்
பெற்றால் குளங்கள்பத்து அமைத்ததற்குச் சமன். இவ்வகையில்
ஓர் மரம் நாட்டிப் பரிபாலித்தால் அது புத்திரர் பதின்மருக்குச் சமன்"

என இவ்விருட்சாயுர்வேத இலக்கியம் மரம்நாட்டிப் பரிபாலிப்பதன் தேவையை வியந்து கூறுகிறது. மேலும் இந்நூலிலே

"அரசமரம் ஒன்று, வேப்பமரம் ஒன்று, ஆலமரம் ஒன்று
புளியமரங்கள் பத்து, விளாமரம் மூன்று, வில்வமரம் மூன்று

நெல்லிமரம் மூன்று, மாமரம் ஐந்து ஆகியவற்றை
நிருமித்தவன் நரகத்தைப் பார்க்க மாட்டான்"

என மறுமையிலும் நற்பேறு பெறுதற்காகத் தாவரங்கள் நாட்டலின் அவசியத்தை எடுத்துக் கூறியுள்ளது.

வெவ்வேறு மரங்களை நாட்டலின் நன்மைபற்றிக் கூறும் விருட்சாயுர்வேதமானது. வில்வமரம், துளசிச்செடி நாட்டிப் பரிபாலித்தலின் சிறப்புப் பற்றிக்கூறியுள்ளது. அதாவது

" சிவபிரானுக்கு விருப்பமான வில்வமரத்தை ஒருவன்
நாட்டிப் பரிபாலிப்பானாயின் அவனது வம்சத்தில்
தலைமுறை தலைமுறையாகத் திருமகள் குடியிருப்பாள்"

இதேபோல்

"ஒருவனுடைய வீட்டிலே துளசிச் செடி நாட்டி
எத்தனை நாட்கள் இருக்கிறதோ அத்தனை
ஆயிரம் வருடங்கள் அவன் வைகுந்தத்தில்
பெருமையடைவான்"

மேலும் இவ்விருட்சாயுர்வேதம் எடுத்துக் கூறுகையில் "பூத்துப் பழுத்துக் குலுங்கும் வெவ்வேறு மரங்கள் பல வைத்து வளர்ப்பவன் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த புண்ணியத்தை அடைவான்" என வெவ்வேறு தாவரங்களை நட்டுப் பராமரிப்பதன் அவசியத்தை எடுத்தும் காட்டியுள்ளது.

பிரம்மவைவர்த்த புராணம் "நாவல், மாதுளை, வாழை, மா போன்ற மரங்களை வீட்டில் வைத்துப் பராமரித்தால் வீட்டின் எஜமானன் பாக்கியவான் ஆகிறான்" என்று கூறுகிறது. இதேபோல் மற்சபுராணமும் "வீடுகளில் வாழை நட்டுப் பராமரிக்கின் வீட்டில் பாக்கியத்தை அளித்துச் செல்வத்தை விருத்தி செய்யும்" என்றும் கூறுகிறது. யாவர் தினந்தோறும் பிராமணர்களை மகிழ்விக்கிறார்களோ, யாவர் தான தருமங்களைச் செய்கிறார்களோ, யாவர் தாய்தந்தைக்குப் பணிவிடை செய்கிறார்களோ, யாவர் பக்தியினால் தெய்வங்களைப் பூஜிக்கிறார்களோ அவர்கள் பெறும் மேலான கதியை, மரங்களை நட்டு வளர்த்தவன் பெறுகிறான்"

என 'மரவுலகின் விந்தை' எனும் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனான மொழி பெயர்ப்பு நூலைத் தந்த ச.கு. கணபதி ஐயர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

மேலே தந்த கருத்துக்களின் படி இம்மையிலும் மறுமையிலும் நற்பயனை அடைய நாமெல்லாம் மரங்களை நாட்டி மாண்புறுவோமாக.

### இறைபணி

இறைபணி என்பது மக்களுக்காகச் செய்கின்ற பணியாகும். தன்னுடைய ஈடேற்றத்திற்காக, மோட்சத்திற்காகச் செயற்படுபவன் சுயநலவாதி. இறைபணி என்பது மக்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் செய்கின்ற பணியாகும்.



உ

# முன்னோர் சொன்ன கதைகள்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.

இந்த உலகில் எம்மைப் பற்றிக் கொண்டு துன்பப்பட வைப்பவற்றுள் ஒன்று 'பற்று' ஆகும். 'எனது' என்ற பற்றின் எல்லை விரிவடைந்து செல்வதால் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. 'என் தந்தை, தாய், சகோதரன், பிள்ளை' என்ற பற்று எனது உறவுகள், எனது ஊரவர் என விரிவடைகிறது.

அந்தப் பற்று, 'என்னுடையது தான் சிறந்தது' 'என்னுடையதுதான் சிறப்புப்பெறவேண்டும். வளர்ச்சியடைய வேண்டும். புகழப்படவேண்டும்.' என எண்ணவைக்கிறது. மனம் நடுநிலையிலே நிற்கமுடியாமல் தான் பற்றுவைத்ததன் பக்கம் சார்கிறது. தான் பற்றுவைத்ததன் பால் நிறையையே காணவும், குறையைக் காணத் தவறவும் செய்கிறது.

இந்த மனப்பாங்கு மேலும் தீவிர மடைகையில் என்னுடையது அல்லாததை வெறுக்கவும் அழிக்கவும் வைக்கிறது.

'நானும் நன்றாக இருக்கவேண்டும். மற்றவனும் நன்றாக இருக்கவேண்டும்.' என எண்ணுவோர் குறைவு. இதன் காரண மாகவே 'எனது மகன் சிறந்தவனாக வேண்டும்' என எண்ணுபவன், அடுத்த வீட்டுக்காரனின் மகன் அதேபோலச் சிறப் படைந்தால் அவனை எப்படியாவது பின் தள்ளிவிட சதிகூடச் செய்கின்றான்.

'இது தவறு, மற்றவனையும் சகோ தரனாகக் கருது' 'பற்று வைக்கக்கூடாது' என்றெல்லாம் சுலபமாகக் கூறலாம். எழுத லாம். ஆனால் செய்வது சிரமமானது. எனினும் அதைச் செய்வோராக. எம்மை மாற்றியே ஆகவேண்டும்.

இறைவனையும் சமயத்தையும் பொறுத்தவரைகூட 'பற்று' இப்படியாகத் தானிருக்கிறது. பேராயிரம் பரவி பரம் பொருளை வணங்குகின்றோம். எம்மைப் பக்குவப்படுத்தவென்றே சமயநெறிகள் உருவாகின. ஆனால் சமயத்தின் பெயரா லேயே எவ்வளவு சண்டைகளும் சாவு களும் நிகழ்கின்றன!

ஒருவர் தமது சமயநெறியைச் சரிவரப் பின்பற்ற வேண்டும். அவர் வணங் கும் இறைவன்மீது பரிபூரண பக்திசெலுத்த வேண்டும். அதேவேளையில் மற்ற சமயத் தவரையும் மதிக்கவேண்டும். மற்றச் சமயத்தவரைத் தாழ்த்திப்பேசுதல், பார பட்சம் காட்டுதல், சமயமாற்றம் செய்விக்க முற்படுதல் போன்றவற்றைச் செய்யும் போதுதான் பிரச்சனைகள் தோன்று கின்றன.

எல்லாச் சமயங்களும் அன்பா யிருக்க வேண்டுமெனப் போதிக்கின்றன. இறைவனை அன்புருவாகக் காண்கின்றன. நாம்தான் கண்மூடித்தனமாக அடிபட்டுக் கொள்கின்றோம். எந்த உருவைக் கற் பித்து, எந்தப் பெயரைக் கூறி வழிபட் டாலும் அன்புருவான இறைவனைத்தான் வணங்குகின்றோம் என்பதை மறந்துவிடு கிறோம். இதை விளக்கும் கதையொன் றைப் பார்ப்போம்.

அகத்திய முனிவர் ஒருமுறை திருக்குற்றாலத்திற்குச் சென்றார். அங்கே கோவில்கொண்டிருந்த நாராயண மூர்த் தியை வழிபட்டுக்கொண்டிருந்த வைணவர்

ஒரு விநாடிப் பொறுமை பத்துவருட சுகம்.

கள் சைவசமயத்தர் மீது விரோதங்காட்டி வந்தனர். விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவசின்னங்களை அணிந்தவர்களை வெறுத்தார்கள். நாராயணனின் கோவிலினுள்ளே அவர்களை அனுமதிக்க மறுத்தனர். அகத்திய முனிவரும் திருநீறு, உருத்திராக்கம் ஆகியன அணிந்து சென்றதால் அவரையும் கோவிலுள் செல்ல விடாது தடுத்தனர். அவர்களுடைய எதிர்ப்பையும் வெறுப்பையுங் கண்ட அகத்தியர் 'இப்படி நடந்துகொள்வது தவறு. இறைவன் ஒருவனே' என அவர்களுக்கு உணர்த்தவேண்டுமென முடிவுசெய்தார். அங்கிருந்து அகன்று சென்றார்.

திருமாலின் அடியவர் போன்று திருமண் அணிந்து, அகத்தியர் மீண்டும் அங்கே வந்தார். சைவசின்னங்களுடன் வந்து தாங்கள் விரட்டிய முனிவரே மீண்டும் வைணவ சின்னங்களுடன் வந்திருக்கிறார் என்பது அவர்களுக்குப் புலப்படவில்லை. அவரை மிகுந்த மகிழ்வோடு வரவேற்றார்கள். உபசாரஞ்செய்து, காலில் வீழ்ந்து வணங்கினர். "எல்லாம் நாராயணனுக்கே ஆகட்டும்" என அவர்களுக்கு அகத்தியர் ஆசி கூறினார்.

அகத்தியமுனிவர் கோவிலினுள் சென்று நாராயணமூர்த்தியை வழிபடத் தொடங்கினார். பக்தியுடன் சிவபிரானைத் தியானித்து வழிபட்ட அவர் நெடிய திருமாலின் வடிவத்தின் திருமுடியில் கையை வைத்து "குறுகு, குறுகு" எனக்கூறினார். அடியவர்களின் பக்தியிலே குழைந்துவிடும் இறைவன் குழைந்து குறுகிசிவலிங்க உருவமாக மாறி காட்சிகொடுத்தான்.

அதைக் கண்ட வைணவர்களுக்குத் தமது தவறு புரிந்தது. இறைவன் ஒருவனே என்பதை உணர்ந்துகொண்டனர்.

வைணவர்கள் திருமாலின்பேரில் பக்திபூண்டு வழிபடுவது நல்லதே. சைவர்களை வெறுத்ததே தவறு, அதை உணர்த்தவே அகத்தியர் இப்படிச் செய்தார். வைணவரும் பௌத்தரும் சைவத்தை அழிக்கவேண்டுமென எண்ணிச் செயற்பட்ட வேளைகளிலேயே சமய குரவர்களான திருஞானசம்மந்தப் பெருமானும் திருநாவுக்கரசு நாயனாரும் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டதை நாம் கவனிக்கவேண்டும். மதங்கள் எம்மை நல்வழிப்படுத்த தந்துள்ள போதனைகளை நாம் நன்கு பயின்று அவற்றைப் பின்பற்றி பண்பானவர்களாக வாழவேண்டும். மதங்கள் எம்மை மதங்கொள்ளச் செய்ய உருவானவையல்ல என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். இதனையே இக்கதை போதிக்கின்றது.

நாம் இறைவன்மீது செலுத்துகின்ற பக்தியும் அந்த இறைவன்மீது செய்கின்ற வழிபாடும் உண்மையானதாக இருக்கவேண்டும். இதைத்தான் புராணங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. பரந்த கல்வி அறிவோ, ஆழமான சமய அறிவோ கண்ணப்ப நாயனாரிடம் இல்லாத போதிலும் சிவபெருமான்மீது உண்மையான அன்பும் அந்த அன்பை வெளிப்படுத்தக் கூடியதான உண்மையான வழிபாடும் அவரை சில நாட்களுக்குள்ளேயே இறைவனை அடையும் நிலைக்கு உயர்வடையச்செய்தது. ஆகவே எவ்வளவு காலம் வழிபடுகின்றோம் எப்படி வழிபடுகின்றோம் என்பவற்றை எல்லாம்விட நாம் உண்மையாக வழிபாடு செய்கின்றோமோ என்பதைச் சிந்திப்பதே சிறந்ததாகும்.

**ஆரோக்கியத்திற்கு ஒப்பான நண்பன் வேறுயாருமல்ல.**

உ

# சீவன் முத்தர் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்

**ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அவர்கள்.**

அலைகடல்போல் அருளன்பு பொங்கிவடி யும்முகத்தர்
கலைகளறு பதும்கற்றுக் களிக்கின்ற மார்பகத்தர்
தலைசிறந்த நூல்களைப் படைத்தளித்த திருக்கரத்தர்
புலனைந்தும் வென்றுஞானம் பெற்றமா பெரும்சித்தர்

ஈழத்தின் மணி மகுடமாய்ச் சூரியப் பிரகாசாய் இருப்பது யாழ்ப்பாண மாகும். யாழ்ப்பாண மணிமகுடத்தின் அதி பிரகாச முத்துமணியாய் இருப்பது சர சாலை என்னும் கிராமம்.

இக்கிராமம் நீர்வளம், நிலவளம், நிழல்வளம், பக்திவளம் மிகுந்த ஊராகும். இவ்வூரில் சைவவேளாமரபில் வாழையடி வாழையாகத் தோன்றிய அருணாசலம் நல்லபிள்ளை என்ற தம்பதிகட்குத் தவப்புதல்வனாக தமிழ் வைகாசிமாதம் முதலாம் திகதி 1914ஆம் ஆண்டு செல்லத்துரை சுவாமிகள், உலகத் தமிழர் செய்த மாதவத்தால் அவதாரம் செய்தார். சைவர் மரபில் அவதாரம் செய்த சுவாமிகள் வளரும் போதே சிவநாமங்களையும் கல்வியுடன் நாத்தேயக் கற்றார்.

ஆரம்பக் கல்வியைப் பண்டிதர் பள்ளிக்கூடத்திலும் இளமையில் ஆங்கிலக் கல்வியை கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் ஆங்கிலமும் கற்றுத் தலை மாணவனாகத் திகழ்ந்தார். "விளையும் பயிரைமுளையில் அறியலாம்" என்றாங்கு சுவாமிகள் தமது வளரும் காலத்தில் நடமாடும் தெய்வம் போன்ற ஞானிகளைத் தரிசித்து உறவாடி தமது அகத்திலும் புறத்திலும் சைவமும் தமிழும் கமழுகின்ற ஞானப்பயிரை வளர்க்கத் தொடங்கி மணிவாசகப் பெருமான் போன்று உண்மைப் பொருளை உணரும் பெரும் ஆவலும் தீராத வேட்கையும் கொண்டார்.

**ஆசிரியத் தொழிலும் ஆன்மீகத் தாகமும்:-**

"அரிது அரிது மானிடராதல் அரிது" இவ்வாறு அரிதாகப் பெற்ற மானிடப்பிறவி கூன் செவிடு போன்ற அங்கங்கள் குறைவின்றிப் பூரணமாகப் பிறந்தால் மட்டும் போதுமா ஆதியைத் தொழுதல் அதுவே அரியது என்பது பழம்பெரும் செந்தமிழ் ஔவைப் பிராட்டியின் முதுமொழியாகும். "எண்ணரிய பிறவியில் மானிடப் பிறவியே சிறந்தது" என்பது தாயுமானவரின் அருள்வாக்கு, "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ்சிரிப்பும், பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்பதை நன்கு உணர்ந்த சுவாமிகள் 1940இல் கொழும்பு மாளிகவத்தையில் உள்ள பாடசாலையில் ஆசிரியப் பதவி பொறுப்பேற்றார்.

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பினும் இறையோடு இசைந்த வண்ணம் தாமரை இலைத் தண்ணீர் போலக் காணப்பட்டார். விடுமுறைக் காலங்களில் உயிருக்குத் தோன்றாத்துணையான இறைவனுடைய ஆலயங்கட்குச் செல்லத்

**சித்தம் பரிசுத்தமாக இருக்கவேண்டும்.**

தவறமாட்டார்.

சுவாமிகள் தனது உற்ற நண்பனான ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளுடன் எப்போதும் எக்காலத்தும் இலங்கையில் உள்ள பழைமை வாய்ந்த கதிர்காமம், சிவனொளி பாதமலைக்குச் செல்வார். நீண்ட விடுமுறைக்கு இந்திய தலயாத்திரை செய்து ஞானிகளுடன் உறவாடி சற்சங்கம் நிகழ்த்துவார்.

அக்காலத்தில் திருவண்ணாமலை, ரமணமுனிவரிடம் அடிக்கடி செல்வதுண்டு. முனிவரின் அற்புதங்கள் அறிந்த மேலைத்தேய ஆங்கிலேயரும் ஸ்ரீ ரமண முனிவரிடம் வருவார்கள் தரிசிப்பார்கள். அவரின் உபதேச மொழிக்காக வருடக் கணக்கில் அருந்தவம் செய்வார்கள். ஞானிகளின் நயன தீட்சை ஸ்பரீச தீட்சையானது மலங்களைக் கெடுத்து தெவிட்டாத அருள் ஞான இன்பத்தை அளிக்குமாகையால் செல்லத்துரைச் சுவாமிகளும் ஆத்மஜோதிச் சுவாமிகளும் பாடசாலை விடுமுறை நாட்களில் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணரிஷியின் மடத்தில் ஆன்மீகத் தேன் பருகிவந்தனர்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தூம்பீ"

ஸ்ரீ ரமணரிஷிகள் சமாதியாகும் காலம் நெருங்கி அவர்களின் ஆன்மா ஒளிப்பிளம்பாகி வானை நோக்கிச் செல்லும் தரிசனம் இலங்கைவாழ் ஞானியர்க்குத் தெரியமுன்பு செல்லத்துரை சுவாமிகள், புகையிரதத்தில் 1950ஆண்டில் பாடசாலைக்குப் பயணம் செய்கின்றபோது றம்புக்கணை புகையிரத நிலையத்தில் தமக்கு மேலாக பகவான் குடையுடன் செல்வதைக் கண்டார். தீர்க்க தரிசனமாக ஸ்ரீ ரமணமுனிவரின் சமாதியாகும் காலத்தை உணர்ந்து திருவண்ணாமலை விரைந்து சென்றார். முனிவரின் சமாதிக் கிரிகைகள் முடிந்த பின் வடஇந்திய தலயாத்திரை ஆத்மஜோதி முத்தையா சுவாமியுடன் செய்தார்.

திருக்கேதாரயாத்திரையில் பனிக்கட்டியை உடைத்துச் சிவலிங்க தரிசனம் செய்ததும் செல்லத்துரை சுவாமிகட்குத் தியான நிலையுடன் சமாதிநிலையும் கை கூடவே, தவத்திரு யோகசுவாமிகள் பிரத்தியட்சமாக செல்லத்துரை சுவாமிகளின் முன்தோன்றி விரைவில் யாழ்ப்பாணம் வா என ஆங்கிலத்தில் அருளி மறைந்தார்.

செல்லத்துரை சுவாமிகள் வடஇந்திய யாத்திரை முடித்து யாழ்ப்பாணம் வந்தார். அப்போது அவர்களின் ஆசிரியர்த்தொழில் மாற்றக் கடிதமும் யாழ்ப்பாணம் நாவற்குழிக்கு வந்துவிட்டது.

(தொடரும்....

**ஓயாது பிறவி**

கடலில் அலை ஓயாது வீசுவதுபோல் ஓயாமல் புல்லாய், பூடாய், புழுவாய், மரமாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், மாறிமாறிப் பிறந்து உழல்வதால் பிறவியை முடியாப்பிறவிக் கடல் என ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

**ஞானம் வளர நல்ல ஆசான் வேண்டும்.**

உ



# மாதம் தோறும் விநாயக சதுர்த்தி

**செல்வன் ச. பிங்கலன் அவர்கள்.**

வினை விக்கினங்களைத் தீர்ப்பதுடன் ஓங்காரப்பொருளாக விளங்கியானை முகமும் தும்பிக்கையும் பெருவயிறும் கொண்டவர் விநாயகப்பெருமான். பிள்ளையார், கணபதி, ஆனைமுகன், ஐங்கரன் எனப் பலவாறு சிறப்பித்து கூறப்படும் விநாயகரை வழிபடற்குரிய விரதங்களில் சுக்கிர வாரவிரதம், சதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என்பன குறிப்பிடத்தக்கவை. சைவ நெறியினர் நினைத்த காரிய சித்தி, முயற்சித் தடைநீக்கம் என்னும் பொது நோக்கத்தை அடைய விநாய சதுர்த்தி விரதத்தை நோற்பர்.

விநாயக ஆலயங்களில் சிறப்பாகவும் ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் நிகழும் விசேடபூசை வழிபாடுகளைத் தரிசித்து அடியவர்கள் நோற்கும் விரதம் விநாயக சதுர்த்தி ஆகும். மாதந்தோறும் வளர்பிறையில் வரும் சதுர்த்தி தினத்திலும் தேய்பிறையில் வரும் சதுர்த்தி தினத்திலும் விநாயகரைக் குலதெய்வமாகவோ இஷ்ட தெய்வமாகவோ போற்றும் அடியவர்கள் சதுர்த்தி விரதம் அநுட்டிப்பர். தேய்பிறையில் வரும் சதுர்த்தி "சங்கடஹர சதுர்த்தி" என்று சிறப்பித்துக் கூறப்படும். வாழ்வில் ஏற்படும் சங்கடங்களை நீக்கச் சங்கடஹர சதுர்த்தி சிறப்பாகப் பலன் தரும். வளர்பிறைச் சதுர்த்திகளில் ஆவணிச் சதுர்த்தி ஏனைய சதுர்த்திகளை விட மிகமிக மேலானதாகச் கருதப்படுகின்றது. முக்கியமாக மகாராஷ்டிரத்தில் மும்பையிலும் பிற நகரங்களிலும் ஆவணிச் சதுர்த்தி வைகாசிமாத விசாகம் போல நாடளாவிய ஒரு விழாவாகப் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது. வனவாச காலத்தில் பஞ்சபாண்டவர்கள் சூதமுனிவரின் உபதேசத்திற்கு இணங்க அனுட்டித்த வரலாற்றுச் சிறப்புமிக்க விரதம் ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

இச்சதுர்த்தி விரதத்துக்குரிய நியதிகளில்

1. நண்பகலில் உண்ணல், இரவில் பட்டினி இருத்தல்.
2. நாவற்பழம், விளாம்பழம், வெள்ளரிப்பழத்துண்டு, வாழைப்பழம், கொழுக்கட்டை, மோதகம், அப்பம், கரும்பு ஆகிய ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்னும் எண்ணிக்கையில் விசேட நிவேதனம் படைத்தல்.
3. இருபத்தொரு பாத்திரம், இருபத்தொரு மலர், இருபத்தொரு அறுகம்புல் என்பவற்றால் நிகழும் தனித்தனி அருச்சனையைத் தரிசித்தல்.
4. விநாயகர் அகவல், விநாயக கவசம், விநாயகர் துதி முதலியவற்றைப் பாராயணம் செய்தல்

என்பன சிறப்பாகச் கூறத்தகவை ஆகும்.

**கல்வியின் பயன் அறிவும் பணிவுமாகும்.**

உ

(தொடர்ச்சி...



# அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்..

செல்வி தி. வரதவாணி அவர்கள்.

காலத்தின் தேவையறிந்து கற்கின்றோர் சுவையறிந்து இலக்கியங்களைப் படைக்கின்ற இலக்கியவாதியே சிறந்த படைப்பாளி. அந்தவகையில் அருட்கவி ஐயாவும் காலத்துக்குக் காலம் மக்கள் பயன் அடையுமாறு மனதைக் கவரும் நோக்கில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளார். இவர் சேவைப்பான்மை வழிகள்பல. சோதிடம், வைத்தியம், கதாப் பிரசங்கம், எனப்பல இருந்தாலும் இவரது இலக்கியப்படைப்பே இவரது எண்ண வெளிப்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாய் அமைந்தது. திருவூஞ்சல், பிள்ளைத் தமிழ், தோத்திரமாலை, அந்தாதி, திருப் பள்ளிஎழுச்சி, திருப்புகழ், கீர்த்தனைகள், அனுபூதி, பேரின்பக்காதல், தலபுராணங்கள் என சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியங்களை படைத்த பெரும்புலவர். இவற்றுள் மிக அண்மையில் வெளியிடப் பட்ட இவரது கவிதைப் பாவனையிலமைந்த உரைநடைக் காவிய இலக்கியப்படைப்பு இன்றைய மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் சென்றகாலமக்களது உள்ளம் கவர்ந்த தத்துவ நுட்பங்களையும் இனி வரும் காலமக்களுக்கு சமயம் சார்ந்த சிறந்த ஒரு வழிகாட்டிநூல் என்னும் சிறப்புக்கும்முரியது ஆகும். வசனகாவிய அமைப்பில் இவர் இரண்டு வசனகாவியங்களை எமக்கு அளித்துள்ளார். ஒன்று கந்தபுராணவசனகாவியம் மற்றையது ஸ்ரீ விநாயகபுராண வசனகாவியம் என்பவை யாகும்.

புராணம் என்பது புராதனம் அல்லது பழைமையானது என்பது பொருள். வேததத்துவங்களையும் தருமங்களையும் விரித்துக் கூறுவது புராணம். அதனைப் படித்தால் வேதநீதிகள் எவை என்பதனை நாம் அறிந்து கொள்வதுடன் பங்கயத்து அயனும் மாலும் அறியா சமய தத்துவ நீதிகள் பற்றி அறிந்து கொள்ளலாம். இந்த நீதியை ஆன்மாக்கள் அறிந்துணர்ந்து பாசநீக்கம் பெற்று இறைவன் திருவடி இன்பத்தைப்பெற மலர்ந்தவையே இப் புராணங்களாகும்.

அத்தகைய உயர்வுமிக்க புராணங்களிலே சிறந்தது எது என்று பார்த்தால் "கந்தபுராணத்தில் உள்ள பொருள் வேறு எந்தப் புராணத்திலும் இல்லை" என்கிறது பழமொழி. "ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலம் கவிகல்மஷ நாசனீம்" அதாவது கந்தப் பெருமானது நிகரில்லாக் கீர்த்தி ஒன்று தான் கலியில் வரும் பாவங்களைப் போக்கவல்லது என்று வியாசர் மாதவமுனிவருக்கு கூறியதைப் போன்று இக்கலியுக நன்மை கருதி அருட் கவிஐயா அவர்களும் கந்தபுராணம் என்னும் திவ்வியபுராணத்தை வசன காவியமாக எமக்களித்து எம்மை உயரிய நெறிக்கு இட்டுச் செல்கின்றார். பாலர் முதல் முதியோர்வரை படித்துப் பக்தர்கள் ஆகவேண்டும் என்பதே இவரது பேரவா. அகராதி கொண்டு பொருளை ஆராயாமல் பக்தர்களுக்கு நன்கு விளங்கக் கூடியதாக ஐயாவினது கந்தபுராண வசனகாவியம் அமைந்துள்ளது.

**உலகில் எதையும் உனது என்று நினைக்க வேண்டாம்.**

சைவ சித்தாந்த விழுமியங் களைக் கூறும் ஒப்பற்ற திருநூலான கந்த புராண வசனகாவியம், வசனகாவிய மரபுக்கு இயைய விநாயகர் சுப்ரமணியர் காப்புச் செய்யுள்களுடன் தொடங்கி நூற் பயனையும் கூறிக் கடவுளர் வாழ்த்துக் களுடன் 201 பக்கங்களில் விரிவு பெறு கின்றது. உற்பத்திக்காண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என்ற வரிசையில் கந்தபுராண மூலநூல் மரபுக்கியைவாக இவ் வசனகாவியம் உரு வாக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

வசனகாவிய நடையில் தெளிவும் பொருத்தமான சொற்பிரயோகங்களும் இந்நூலை அணி செய்கின்றன. அருட்கவி ஐயாவின் இந்நூல் நாவலர் பெருமானின் கந்தபுராண வசனநூலின் மரபில் அமைந் துள்ளமை புராணமரபின் மற்றொரு பரிமா னத்தைக் காட்டிநிற்கின்றது. எடுத்துக் காட்டாக முருகனது திரு அவதாரம் கந்தபுராணத்தில் கூறப்படும் போது

"அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
.............
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

எனும் பாடலை விநாசித்தம்பிப்புலவர்,

அருவமும் உருவமும் அநாதியும் பலவும்
ஒருவனும் ஓங்கிய பிரம்மப்
பரம்பொருள் அறுமுகம் பன்னிருகரங்கள்
இருதிரு வடிமலர் இசைந்த முருகன்"

என அழகுற அமைத்துள்ளார்.

இவற்றுடன் தாம் கூறும் கதையினை மக்களின் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தும் பாங்கும் இவரது நூலின் சொற்பிரயோகம் நடைமாற்றச் செயன்முறைகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

"கடும் போரைக் கண்டு மிகக்
கதிரவனும் மனமகிழ்ந்தான்
கொடுங் கோபச் சிங்கமுகன்
குழுமிவந்த பூ தர்களை
மலைமேல் எடுத்தெறிந்தான்
வந்தசில பூ தர்களை
அலைகடலில் எடுத்தெறிந்தான்
ஆகாயம் மேலெறிந்தான்
அள்ளியள்ளி எறிந்தேறிந்தே
அவனியிற்கா லால் மிதித்தான்
கொள்ளும்வரை வாயிலிட்டான்
குருதிநதி ஓடியது"

**தொண்டு என்பது அடிமை வேலையன்று.**

"கந்தபுராணத்துப் பிறப்பிடம் கந்த சுவாமியின் திருவருள் பெருகுங் காஞ்சிமா நகரமேயாயினும் அதனைப் பிள்ளைமைப் பருவத்தில் இருந்தே பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும் தலவிசேடம் படைத்தது ஈழம். சிறப்பாக யாழ்ப்பாணம். ஈழத்தில் கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில் சந்நிதி விரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராணபடலம் நிகழத் தும்முறை வேறு எங்கும் காணாதது. இம் முறையின் வரலாறு சிந்திக்கற்பாலது எனக் குறிப்பிடுகின்றார். இலக்கிய கலா நிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாச்சாரம் மேலோங்க உதவிய இக்கந்த புராணத்தை வசனகாவியமாக்கி புராண படன முறைக்கும் வாய்ப்பளித்துள்ளார் அருட்கவி அவர்கள்.

நம்முடைய சைவசமய நூல் களை எல்லோருக்கும் எளிதில் உபயோக மாகும் பொருட்டு வெளிப்படையாகிய வசனநடையில் செய்து, அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தின் அதுபெரும் புண்ணிய மாகும். அன்று துணிந்து, சில வருடங் களுக்குமுன் பெரியபுராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்கு பெரும்பயன் விளைத்தலை கண்டறிந்தமையால் கந்த புராணத்தையும் அப்படியே செய்கின்றேன் என்று கூறியுள்ளார் நாவலர் பெருமான். அத்தகைய பெருமைமிக்க கந்தபுரா ணத்தை நாவலரது வழியைப் பின்பற்றி கந்தபுராண வசனகாவியமாக எமது நாட்டில் வெளிப்படுத்தியுள்ளவர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவராவார்.

இறைவன் புகழ் பாடிப்பரவு தலையே தம் வாழ்நாளின் இலட்சியமாகக் கொண்ட இவர் சிந்தித்தவற்றை உடனே கவிகலந்த இலக்கியவடிவில் கொண்டுவரு வதில் வல்லவர். "சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை" என்று கூறுவதற்கிணங்க கதிர்காமவேலன் அருளால் உதித்த ஐயா அவர்கள் முருகனின் திவ்ய காவியத்தை தம்மனதில் வைத்து நினைந்து இன்ப மடைந்து எழுதி வெளியிட்ட பெரும் பேழைதான் இக் கந்தபுராண வசனகாவிய மாகும்.

இந்நூலில் கருத்தூன்றிப்படிக்க வேண்டியது யுத்த காண்டமாகும். இப்பகு தியை நாற்பது பக்கங்களில் தந்திருக் கிறார். அடுத்து தேவர்களின் வேண்டுதலும் தெய்வயானை அம்மன் திருமணமும் மூல புராணத்தின் படியே முறையாக நகர்த்திச் சென்றுள்ளார். பக்தர்களும் விரதிகளும் ஆய்வு செய்வோரும் அகந்தையை அடக்கி வாழவேண்டும். உண்மையை உணர்வோரும் பயனடையக்கூடிய வகை யில் தெளிவான வாக்குகளினால் வெளிப் படுத்தப்படுகிறது தட்சகாண்டத்தில்.

இறுதியாக கந்தபுராணத்தை மனமுருகிப்பாடி மகிழ்பவர்கள் பெறும் பயன் பற்றி பின்வரும் பாடல்மூலம் குறிப்பிடுகின்றார்.

"இந்திர ராகப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ
ரந்தமி யவுணர் தங்க ளுடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே"

**அமைதி குறையக் குறைய துன்பம் வளரும்.**

கந்தபுராண நூற்பயனைப்பெற அருட்கவியின் கந்தபுராண வசனகாவியம் வழியமைக்கும் என்பது எமது திடமான நம்பிக்கை. காலத்தினால் மாறுபடாத சமய தத்துவ சிந்தனைகளை இளம் தலைமுறையினர் நன்கு அறிந்து கொள்ளும் நோக்கில் இந்நூலினை ஆக்கி எமக்கெல்லாம் அளித்த அருட்கவிஐயாவினது ஆற்றல் பாராட்டுக்குரியதேயாகும்.

கந்தபுராணச் சிந்தனைகள் எங்கும் பரவவேண்டும் என்ற நோக்கில் வெளிவரும் இந்நூலை பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள்.

"கந்தபுராண வசன கவிதை என்றும் நிலவி
எங்கும் பரவி சிறப்புற் றோங்குக.

என வாழ்த்திக் கூறியுள்ளார். இத்தகு சிறப்புமிக்க அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயாவின் சைவமும் தமிழும் தழைக்கவேண்டும். என்கின்ற பணியின் ஒரு பெருமுயற்சியே இக் கந்தபுராண வசனகாவியம் என்றால் அது மிகையாகாது.

(தொடரும்...

## வேண்டும் அன்பரைக்கூட்டும் சந்நிதியான்

அழியாத அன்பும் நிலையான அருளும் ஆர்ப்ப
அன்பகலா நெஞ்சும் ஆரணத்தெளிவும் ஆர்ப்ப
ஆசைவிடா மனையும் அறந்தரும் சேயும் ஆர்ப்ப
ஆன் மீகத்துறையும் ஆட் கொள்ளும் காலமும் ஆர்ப்ப
அடங்கிடும் பண்பும் அமைவான சிறப்பும் ஆர்ப்ப
அசை விலாதுதருவான் தொண்டைமானாற்றுடையப்பன்!

ஏழிசை புகுந்து தாழிசை மகிழ்ந்தாட
எண்ணற்ற ஞானம் எழுந்தோடி மல்க
ஏதிலார்க்கதி நல்கும் எம் பிரான்சந்நிதியே!
ஏடும் எழுத்தும் எண்ணற்றகலையும் காவல்படுத்தும்
ஏழுசுர ராகம் பாடப்பணிக்கும் சந்நிதியே!
எழில் காண் கரத்தில் அதிரும் நல் வேலும் கூடும் சந்நிதியே!

வாடும் மனதில் மகிழ்கரம் கூப்புஞ்செவ்வேழ்
பாடும் அடியார் பணியச்செய்தாடும் நெஞ்சத்தப்பனே!
காடும் கரவாய் கலந்து கரைந்துயர் தீர்ப்பவனே
சாடும் பணியாய் பணிவோர்க்கென்றும் மெய் ஞானாகரனே!
போடும் பொலிவாய் புண்ணியம் தேடும் கலாப ஞானச்சுடரானவனே
பாடும் பணிசெய் யடியார்க்கருள்வாய் பராபரக்குகனே!

*-திரு கலைமணி க. தெய்வேந்திரம் A.I.J.P.*

**எதையும் இறுதிவரை முயன்று செய்யவேண்டும்.**

## 2005ஆம் ஆண்டு உற்சவம் (05.08.2005) தொடக்கம்.

## நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| T. பாலசுப்பிரமணியம் மூலம் விஜி பூங்கோதை கனடா | | 4850. 00 |
| A. சுரேந்திரன் | சிறுப்பிட்டி | 1மூடை அரிசி |
| குகன் ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| மு. கணேஸ் குடும்பம் | இணுவில் | 2மூடை அரிசி, 1மூடை சீனி. |
| ஜென்ஸ் சிவஞ்ஞானம் | பிரான்ஸ் | 36,573. 00 |
| திருமதி சிவகுமாரி சொக்கலிங்கம் மட்டக்குளி கொழும்பு | | 1000. 00 |
| S. வில்வராசா கோலாலம்பூர் | மலேசிரியா | 2000. 00 |
| Dr.K. சிவஞானசூரியர் | கொழும்பு | 3000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| இ. திருச்செல்வம் | ஊரெழு கிழக்கு | 2000. 00 |
| தி. சிவனேசம்பிள்ளை குடும்பத்தினர் | இடைக்காடு | 2000. 00 |
| N. நாகேந்திரம் சிவசக்தி கோவிலடி | அச்சுவேலி | 1000. 00 |
| R.V. கந்தசாமி J.P ஆஸ்பத்திரிவீதி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| நகுலா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ம. சிவநாதன் ஆசிரியர் | அல்வாய் | 500. 00 |
| நா. யுவராஜாமூலம் T.T. துரை | சிங்கப்பூர் | 5000. 00 |
| ரவி மதுரா | உடுவில் | 1000. 00 |
| சி. சின்னராசா | எழுதுமட்டுவாள் | 1000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதிஉத்தியோகத்தர் யாழ்ப்பாணம் | | 1000. 00 |
| பாலமுகுந்தன் சசிகலா குமரக்கோட்டம் கோண்டாவில் | | 10,300. 00 |
| வே. சம்பந்தநாதன் G.S புன்னாலைக்கட்டுவன்தெற்கு சுண்ணாகம் | | 1000. 00 |
| கிறீன்பலஸ் புடவையகம் | திருநெல்வேலி | 2மூடை அரிசி, 1புட்டி உடைத்த உழுந்து, அப்பளம் |
| திரு திருமதி மகேந்திரன் (அவுஸ்ரேலியா) சுண்ணாகம் | | 3000. 00 |
| பொ. பரஞ்சோதி வத்தனை | புலோலி | 5000. 00 |
| K. சோதிநாதன் | இணுவில் மேற்கு | 3000. 00 |
| ச. பகீரதன் | உரும்பராய் கிழக்கு | 5000. 00 |
| R. மணிவாசகன் | அவுஸ்திரேலியா | 10,000. 00 |
| அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம் | | 1மூடை அரிசி |
| M. சேதலின், க. மிதுலன் இமையாணன் உடுப்பிட்டி | | 2000. 00 |
| கி. நல்லம்மா இடைக்காடு | அச்சுவேலி | 1000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம் | ஜேர்மனி | 1000. 00 |
| சு. அருளையா | ஆனைக்கோட்டை | 1000. 00 |

**சத்தியத்தால் மனம் சுத்தமாகிறது.**

| | | |
|---|---|---|
| Dr.S. சண்முகநாதன் (சிவசிவா) | கொழும்பு | 5200. 00 |
| வே. பாண்டியர் | கைதடி தெற்கு | 1000. 00 |
| நா. யுவராஜா பிறவுன்வீதி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சி. பாலயோகன் | லண்டன் | 50 பவுண்ஸ் |
| V. அரவிந்தன் | கொழும்பு - 3 | 5000. 00 |
| சந்திரசேகரம் தயானந்தன் | நவக்கிரி தெற்கு | 5000. 00 |
| மகேஸ்வரி நடராஜா குடும்பம் | மூளாய் | 2500. 00 |
| ஜெ. சந்திரப்பிரகாசம் ஆத்தியடி | பருத்தித்துறை | 6000. 00 |
| நடேசமூர்த்தி பிரசாத் ஆஸ்பத்திரிவீதி அச்சுவேலி | | 6000. 00 |
| க. முத்துவேல் ஆசிரியர் இமையாணன் உடுப்பிட்டி | | 2000. 00 |
| தி. சோமஸ்கந்தராசா குருக்கள் நெல்லண்டை பருத்தித்துறை | | 1000. 00 |
| திரு சுகுமார் | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| சோ. பரமநாதன் G.S | ஏழாலை | 1000. 00 |
| செல்வராசா ராஜேஸ்வரி | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| பாலசிங்கம் ஆனந்தகுமார் துவாரகா | காரைநகர் | 1000. 00 |
| ஒ. ரவீந்திரன் மூலம் திருக்குமரன் | (லண்டன்) ஹற்றன் | 5000. 00 |
| திருமதி செல்வமாணிக்கம் மூலம் திருமதிA. ஞானசம்பந்தன் கனடா | | 10,000. 00 |
| செ. கிருபாகரன் குடும்பம் | அச்சுவேலி வடக்கு | 2000. 00 |
| நா. யுவராஜா மூலம் யு. சிவன்ராஜ் பிறவுண்றோட் யாழ்ப்பாணம் | | 5000. 00 |
| க. சிவசுப்பிரமணியம் வைமன்றோட் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| ஸ்ரீநதியா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சி. சிவசுப்பிரமணியம் ஆனந்தாநிலையம் கரவெட்டி | | 2000. 00 |
| தி. பஞ்சாட்சரதேவன் | குப்பிளான் | 2000. 00 |
| சி. ரூபபாலன் | தெல்லிப்பழை | 1மூடை அரிசி |
| அ. செல்வராஜன் யாமா வளவு | தெல்லிப்பழை | 2000. 00 |
| சி. சிவசுப்பிரமணியம் கற்குழி | சாவகச்சேரி | 1000. 00 |
| சந்திரபால் விதுஷன் | (லண்டன்) வட்டுக்கோட்டை | 3100. 00 |
| ஹர்ஷன் | கட்டப்பிராய் | 3000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் J.P | பத்தமேனி | 1000. 00 |
| V. மாணிக்கராசா | வறாத்துப்பளை | 1150. 00 |
| M. சிவகுமாரன் தாளையடிலேன் | திருநெல்வேலி | 1000. 00 |
| திருமதி P. பரிமளாதேவி . | கைதடி (கொழும்பு) | 5000. 00 |
| ந. தனஜெயன் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி | | 1000. 00 |
| திரு இராசராகுலன் | சுண்ணாகம் | 1000. 00 |
| வேலாயுதம் ஸ்ரீ தயாபதி திருவேரகம் உடுப்பிட்டி | | 1000. 00 |


(தொடரும்....

**கோபம், குற்றம்காணல் ஆகிய இவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.**

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்




2005ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தின் உரிமையாளர் மணி ஐயா என அழைக்கப்படும் சிவானந்த ஐயர் செல்வமணி ஐயர் ஆவார். இவர் உற்சவத்தின் உரிமையாளராக இருந்த அதேநேரம் உற்சவகாலப் பூசையையும் தானே மேற்கொண்டார்கள். இவரது குடும்பம் ஒன்றரை வயதுக் குழந்தையையும் உள்ளடக்கிய மூன்றுபேர் மட்டும் உள்ள ஒரு சிறிய தனிக்குடும்பமாகும்.

2005ஆம் ஆண்டு வருடாந்த உற்சவம் ஆரம்பித்து இறுதி நாட்களை அண்மித்துக் கொண்டிருந்தது. உற்சவம் தொடர்பான எல்லாவகையான செயற்பாடுகளும் நிறைவாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சி. செல்வமணிஐயர் அவர்கள் திருவிழாப் பூசகர் என்ற வகையில் தனது செயற்பாடுகளைத் திருப்தியாக நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மணி ஐயாவின் செயற்பாடு இத்துடன்

**மனிதர்களுக்கு நல்ல அணிகலன் பொறுமை.**

முடியவில்லை. 2005ஆம் ஆண்டு உற்ச வத்தின் உரிமையாளர் என்ற வகையில் உற்சவம் தொடர்பாக எடுக்கவேண்டிய தீர்மானங்கள், உற்சவம் தொடர்பான பொதுவான நிர்வாகச் செயற்பாடுகள், மற்றவர்களுடான பல்வேறுபட்ட தொடர் பாடல், மற்றும் சில தீர்க்கமான முடிவுகள் எடுத்தல் என்று அவரது பணிகள் விரிவுபட்டதாகவே அமைந்திருந்தன.

இவை எல்லாவற்றையும்விட பகல் திருவிழா இரவுத்திருவிழா என்பவை முடிவடைந்த பின்பு ஆலயத்திலுள்ள பொருட்கள் ஒழுங்குபடுத்தல் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல் ஆல யத்தை பௌதீக ரீதியாக இயல்பு நிலைக்கு கொண்டுவருதல் போன்ற கடமைகளை பல தொண்டர்கள் செயற் படுத்தினாலும் அந்த வேலைகளிலும் அவர்களுடன் இணைந்து மணிஐயர் அவர்கள் செயற்பட்டார்கள். சிலவேளை களில் தொண்டர்கள் இரவு நேரத்தில் ஓய்வெடுக்கும் பொழுதுகூட மணி ஐயர் அவர்கள் மிகுதியாக உள்ள சிலவேளை களில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததை அடியே னும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது உண்மையில் ஒரு அசாதாரண செயற்பாடாகவும் அவரிடம் ஒரு அசாதா ரணசக்தி செயற்பட்டுக்கொண்டிருப்பதை யும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந் தது.

சந்நிதி ஆலயம் தொடர்பாக இடம் பெறும் கைங்கரியங்கள் எல்லாம் சந்நிதியானின் அருளாசியுடனேயே இடம் பெறுகின்றது என்று நம்புவதில் முதன்மை யானவர் மிருசுவில்லைச் சேர்ந்த அருளா ளர் விநாசித்தம்பி ஐயா அவர்களாவார். அதுமட்டுமல்ல சந்நிதியானுக்கு நித்திய பூசைகளை மேற்கொள்ளுகின்ற பூசகர்கள், அந்த பூசகர்களது சந்ததியினரை எல்லாம் சந்நிதியானாகவே மதித்து வணங்கி மரி யாதை செய்பவர் அருளாளர் விநாசித்தம்பி அவர்களாவார்.

சந்நிதியில் கந்தபுராணப்படிப்பை பிரதம பூசகர் ஆ. சிவசண்முகஐயர் அவர் களுடன் இணைந்து பல வருடங்களாகச் செயற்படுத்திவரும் அருளாளர் விநாசித் தம்பிஐயா அவர்கள் கந்தபுராணத்தைப் படிப்பதிலும் அதற்கு பயன் சொல்வதிலும் அவருக்கு நிகர் அவரே என்று மதிக்கப் படுபவர். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட அருளாளர் விநாசித்தம்பி ஐயா அவர்கள் திருவிழாவின் இறுதிநாட்களை அண்மித்துக்கொண்டிருந்த அந்த வேளை யில் அதிகாலை 4.30 மணியளவில் வழமைபோல ஐம்புலன்களையும் அடக்கி தலவிருட்சமான பூவரசு மரத்தின்கீழ் நிஷ்டையில் இருக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அதிகாலை 4.30 மணியாக இருந்த அந்த நேரத்தில் ஆலயத்துடன் தொடர்புடைய ஒரு சிலர் மட்டுமே அங்கே நித்திரை விட்டு எழுந்து நடமாடிக்கொண்டிருந்தனர். அதேநேரம் உற்சவத்திற்குரிய பூசகர் மணிஐயா அவர் கள் ஆலயத்தின் உள்வீதியில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். அருளாளர் விநாசித்தம்பி ஐயா அவர்கள் பூவரசு மரத்தடியில் தியானம் செய்ய ஆரம்பிக் கின்றவேளை அங்கே நடமாடியவர்கள் பின்வருமாறு தமக்குள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

''இன்றும் காலைத்திருவிழா வேளைக்குச் செய்ய வேண்டும். மணி ஐயா ஓய்வின்றி தொடர்ச்சியாக வேலை செய்துகொண்டிருக்கின்றார். ராத்திரியும்

**நம்மை உயர்த்துவது செயலன்று ஆர்வமே.**

அவர் பிந்தித்தான் நித்திரைக்குப் போன வர். அவரை ஒருத்தரும் எழுப்ப வேண்டாம் தானாக எழும்பட்டும்"

இத்தகைய ஒரு உரையாடல் விநாசித்தம்பிஐயா அவர்களின் காதில் விழவும் அவர் பூவரசு மரத்தின்கீழ் தியா னம் செய்ய ஆரம்பிக்கவும் நேரம் சரியாக இருந்தது. அதன் பின்பு அங்கே இடம் பெற்ற இதுபோன்ற எந்த புறச்செயற் பாடுகளும் அவரின் சிந்தனைக்குள் செல்லவில்லை. காரணம் அவர் வழமை போன்று ஆழமான அந்த தியானத்தில் மூழ்கிப் போய்விட்டார்கள்.

ஆனால் அந்த தியானத்தின் மத்தியில் அவருக்குத் துல்லியமாகத் தெரிகின்ற ஒரு அற்புதநிகழ்வு அங்கே நடந்தேறியது. திருவிழாப்பூசகர் சரியான நேரத்திற்கு நித்திரையால் எழுந்து தாமதிக்காமலும் விரைவாகவும் தனது கருமங்களை ஆற்றுவார் என்றும் அவை எல்லாவற்றையும் நானே பார்த்துக் கொள் வேன் என்பதை சந்நிதியான் வெளிப் படுத்தும் வகையிலும் தற்காலத்திற்கு ஏற்றவகையிலும் அந்தக்காட்சி அங்கே நடந்தேறியது.

**உற்சவகால பூசையை மேற் கொள்ளுகின்ற மணி ஐயா அவர்கள் புத்தம்புதிய ஒரு மோட்டார் சைக்கிளில் மூலஸ்தானத்தில் இருந்து பின்பக்கத்தி னூடாக மிகவும் வேகமாகவும், லாவக மாகவும் வெளியேறிக்கொண்டிருந்தார்கள்.** அதனைத் தொடர்ந்து சந்நிதியான் காலைத் திருவிழாவில் **வீதி உலா** வந்து தெற்கு வீதியில் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது மணி ஐயர் **அவர்கள் எம்பெருமானுடன் வீதி உலா** வந்து தீபாராதனையை வழமைபோல **மேற்கொள்ளுகின்ற வகையில்** அந்தக் காட்சி அவருக்குத் தென்பட்டது.

ஆம் 2005ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தின் இறுதிநாட்களை அண்மித் துக்கொண்டிருந்தபொழுது இந்தச்சம்பவம் நடைபெற்றது. மறுதினம் விநாசித்தம்பி ஐயா அவர்கள் ஆலயவீதியில் அடியே னுடன் உரையாடும் பொழுது அடியே னுக்கு இந்த அற்புதத்தை வெளிப்படுத் தினார்கள். சந்நிதியானுக்கு நித்திய பூசை கள் உற்சவகாலப் பூசைகளை மேற் கொள்ளுகின்ற பூசகர்கள் சாதாரணமான வர்கள் அல்ல. அவர்கள் சந்நிதியானது அருளாசிக்குட்பட்டவர்கள் என்று தான் நீண்டகாலமாகக் கொண்டிருந்த நம்பிக் கையை சரியான சந்தர்ப்பத்தில் தனக்கு உறுதிப்படுத்துவதற்காக சந்நிதியான் மேற்கொண்ட அற்புதத்தை வியந்து ஆனந்தப்பரவசமடைந்தார்கள்.

மணிஐயர் களைத்துவிட்டார். அவர் நித்திரையால் குறிப்பிட்ட நேரத் திற்கு எழும்புவது கடினம் என்ற இயல் பான உண்மையை ஆலயத்திலுள்ளவர் கள் தமக்கிடையே இடம்பெற்ற உரையா டலின்பொழுது வெளிப்படுத்தியுள்ளனர். இது உண்மையானதும் இயல்பானது மான ஒரு உரையாடல் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். ஆனாலும் இது போன்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் உற்சவ காலப் பூசகர்களுக்கு தேவையான பலத் தையும் பக்குவத்தையும் வழங்கி உற்ச வம் எந்தக்குறைகளுமின்றி நிறைவாகவே நிறைவேறுகின்ற காரியங்களை காலம் காலமாக சந்நிதியான் நடாத்திக் கொண் டிருப்பதை இங்குள்ளவர்கள் நன்கு உணர்ந்து கொண்டவர்களாகவே உள்ள னர்.

**நம்மை உயர்த்துவது செயலன்று ஆர்வமே.**

ஏற்கனவே மணிஐயருடைய அசாதாரண செயற்பாடுகளை அவதானித்து மணிஐயர் என்பவர் சாதாரண ஒருவர்தானே அவரால் எவ்வாறு இவ்வளவு வேலைகளையும் செய்யமுடிகிறது என்று சிந்தித்துக் கொண்டிருந்த அடியேனுக்கு மணிஐயாவுடைய திருவிழாச் செயற்பாடுகள் சாதாரண செயற்பாடுகள் அல்ல. அவை சந்நிதியானது அருட்கடாட்சத்திற்கு உட்பட்ட அசாதாரண செயற்பாடுகள்தான் என்பதை விநாசித்தம்பி ஐயா அவர்களின் உரையாடல் அடியேனுக்கும் உணர்த்துவதாய் அமைந்திருந்தது.

மருதர் கதிர்காமர் சந்நிதியானுக்கு உற்சவத்தை நடாத்துகின்ற கைங்கரியத்தை மேற்கொள்ளுவதற்கு தயங்கி நிற்கின்றவேளை நீ தயக்கமின்றி உற்சவத்தை நடாத்து நான் உனக்குள் நின்று காரியங்களை செயற்படுத்துகின்ற பலத்தையும் பக்குவத்தையும் வழங்குவேன் என சந்நிதி முருகன் வாக்களித்த வரலாற்றுச்சிறப்பை சந்நிதி ஆலயம் கொண்டுள்ளது. இதற்கிணங்கவே இன்றும் இங்கே காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருவருள் நிறைந்த திருவிழாவில் நாமும் பங்குகொண்டு **அவன்** அருள் பெறுவோமாக. (முற்றும்)

ஓம் முருகா!

**தாழ்வில் நேர்மை உடையவர்கள்**
**சாவில்கூட வாழ்வார்கள்**

வாழ்வில் நேர்மை உடையவர்கள்
ஒழுக்கி விழுந்து விடுவதில்லை
ஏழ்மை யாக வாழ்ந்தாலும்
என்றும் நேர்மை தவறாதீர்
தாழ்வில் நேர்மை உடையவரே
சாவில்கூட வாழ்வார்கள்
சூழும் புகழே உனைச்சேரும்
துணிந்து கொள்வீர் நேர்மையினை

***கவிஞர் வ. யோகானந்தசிவம்***

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

காசுக்கட்டளை
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
*T.P. NO. 021-2263406*

காசோலை
**செ. மோகனதாஸ்**
**க.இல. *P. 7481***
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

நம்மை உயர்த்துவது செயலன்று ஆர்வமே.

உ

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

*01~08~2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில்*

**ஸ்ரீமத் மயில்வாகன சுவாமிகளின் 21ஆவது குருபூசைத்தின நிகழ்வு**

---

*04~08~2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**விடயம்:~ இன்னிசை**

**வழங்குபவர்:~ இசைமாமணி எல். திலகநாயகம்போல்**

(பக்கவாத்திய சகிதம்)

---

*11~08~2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**பாடசாலை மாணவர்களின் நிகழ்வு**

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

---

*18~08~2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**சொற்பொழிவு:~ பெரியபுராணம் (தொடர்)**

**வழங்குபவர்:~ அ. குமாரவேல்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

*25~08~2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**ஞானச்சுடர் 104ஆவது மாத வெளியீடு**

**ஆவணி 2006**

**வெளியீட்டுரை:~ சி. சிவபாலசிங்கம்**

(கிராம சேவையாளர்)

**மதிப்பீட்டுரை:~ க. நவரத்தினம்**

(இளைப்பாறிய ஆசிரியர்)

# செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள்
# 2006

ஏப்ரல்
01.04.2006 பங்குனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
11.04.2006 பங்குனி 28 செவ்வாய்
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேக தினம்
14.04.2006 சித்திரை 1 வெள்ளி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
மாலை விஷேட உற்சவம்
29.04.2006 சித்திரை 16 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

மே
12.05.2006 சித்திரை 29 வெள்ளி
சித்திரா பூரணை விரதம்
26.05.2006 வைகாசி 12 வெள்ளி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

ஜூன்
09.06.2006 வைகாசி 26 வெள்ளி
வைகாசி விசாகம் விஷேட உற்சவம்
22.06.2006 ஆனி 8 வியாழன்
கார்த்திகை விரதம் மாலை 5மணி
விஷேட உற்சவம்

ஜூலை
02.07.2006 ஆனி 18 ஞாயிறு
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்
03.07.2006 ஆனி 19 திங்கள்
தீர்தமெடுப்பு
10.07.2006 ஆனி 26 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
16.07.2006 ஆனி 32 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
20.07.2006 ஆடி 4 வியாழன்
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்
24.07.2006 ஆடி 8 திங்கள்
ஆடி அமாவாசை விரதம்
25.07.2006 ஆடி 9 செவ்வாய்
கதிர்காமம் கொடி
28.07.2006 ஆடி 12 வெள்ளி
ஆடிப்பூரம்

ஆகஸ்ட்
09.08.2006 ஆடி 24 புதன்
கதிர்காமத் தீர்த்தம்
இரவு விஷேட உற்சவம்
16.08.2006 ஆடி 31 புதன்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
23.08.2006 ஆவணி 7 புதன்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு கொடியேற்றம்
27.08.2006 ஆவணி 11 ஞாயிறு
காலை திருவிழா ஆரம்பம்

செப்ரெம்பர்
01.09.2006 ஆவணி 16 வெள்ளி
பூங்காவனம்
02.09.2006 ஆவணி 17 சனி
கைலாசவாகன உற்சவம்
05.09.2006 ஆவணி 20 செவ்வாய்
சப்பறம்
06.09.2006 ஆவணி 21 புதன்
காலை தேர்
7.09.2006 ஆவணி 22 வியாழன்
காலை தீர்த்தம்
மாலை மௌனத்திருவிழா
12.09.2006 ஆவணி 27 செவ்வாய்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
23.09.2006 புரட்டாதி 7 சனி
நவராத்திரி விரத ஆரம்பம்
29.09.2006 புரட்டாதி 13 வெள்ளி
சரஸ்வதிபூஜை ஆரம்பம்

ஒக்ரோபர்
02.10.2006 புரட்டாதி 16 திங்கள்
விஜயதசமி
10.102006 புரட்டாதி 24 செவ்வாய்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
21.10.2006
ஐப்பசி 04 சனி தீபாவளி
22.10.2006
ஐப்பசி 05 ஞாயிறு கந்த ஷஷ்டி விரதம் ஆரம்பம்
22.10.2006
ஐப்பசி 10 வெள்ளி கந்த ஷஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
28.10.2006 ஐப்பசி 11 சனி
பாரணை இரவு தெய்வானை அம்பாள் திருக்கல்யாணம்

நவம்பர்
06.11.2006 ஐப்பசி 20 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

டிசம்பர்
03.12.2006 கார்த்திகை 17 ஞாயிறு
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம் இரவு விஷேட உற்சவம்
05.12.2006 கார்த்திகை 19 செவ்வாய் விநாயகர் விரதஆரம்பம்
10.12.2006 மார்கழி 10 உதயம் திருவெம்பாவை பூஜாரம்பம்
விநாயகர் ஷஷ்டி விரதம்
31.12.2006 மார்கழி 16 ஞாயிறு
கார்த்திகை விரதம்
காலை 9.00 மணி விஷேட உற்சவம்

சுப மங்களம்

நன்றி